26.05.15

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**வேளாண் அதிகாரிகள் பல்துறை வல்லுநர்களாக இருந்தால் மட்டுமே விவசாயிகள் வளம் பெற முடியும்**

வேளாண்மைத் துறை அதிகாரிகள் பல்துறை வல்லுநர்களாக இருந்தால் மட்டுமே விவசாயிகள் வாழ்வில் வளம் பெற முடியும் என்று தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் கே.ராமசாமி பேசினார்.

உலக வங்கி, தமிழ்நாடு அரசின் நீர்வள, நிலவளத் திட்டத்தின் உதவியுடன் செயல்படுத்தப்படும் இ-வேளாண்மை செயல் ஆராய்ச்சித் திட்டம் குறித்த 2 நாள் கருத்தரங்கின் தொடக்க விழா கோவை வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் வியாழக்கிழமை நடைபெற்றது. இதற்கு, வேளாண் விரிவாக்கக் கல்வி இயக்குநர் ஹெச்.பிலிப் தலைமை தாங்கினார். இதில், கருத்தரங்கைத் தொடங்கி வைத்து துணைவேந்தர் ராமசாமி பேசியது: பயிர்கள் தொடர்பாக விவசாயிகளின் சந்தேகங்களுக்கு தொலைத் தொடர்பு கருவிகள் மூலம் உடனடியாக விளக்கம் அளிப்பது, ரகம் தேர்வு, சந்தை குறித்த தகவல்கள், தொழில்நுட்ப கருத்தரங்குகள், வேளாண் தகவல்கள் வழங்குவது போன்றவற்றுக்காக இ-வேளாண்மை திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

நாட்டில் 73 சதவீத மக்கள் கிராமங்களைச் சேர்ந்தவர்களாக இருந்து வந்த நிலைமை மாறி, சுமார் 128 கோடி மக்கள் தொகையில் 14 கோடி பேர் மட்டுமே விவசாயிகளாக இன்று உள்ளனர். ஆனால், அரசின் திட்டங்கள், நிதி ஒதுக்கீடு 10 சதவீத விவசாயிகளை மட்டுமே சென்றடைகிறது. தமிழகத்தில் 87 லட்சம் விவசாயிகள் இருப்பதாக புள்ளி

விவரங்கள் கூறினாலும், 58 லட்சம் பேர் மட்டுமே முழு அளவில் விவசாயத்தை மட்டுமே நம்பியிருப்பவர்களாக உள்ளனர்.

இவர்களுக்கு வேளாண்மைத் துறை அதிகாரிகள் தன்னம்பிக்கை அளித்து, தொழில்நுட்ப உதவிகளை வழங்க வேண்டும். விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டிய கடமையில் இருக்கும் வேளாண்மைத் துறை அதிகாரிகள், தங்களை பல்துறை வல்லுநர்களாக தரம் உயர்த்திக் கொள்ள வேண்டியது அவசியம். வேளாண் அதிகாரிகள் உயர்ந்தால் விவசாயம் உயரும். தமிழகம் தானிய உற்பத்தியில் தன்னிறைவு பெற்றுள்ளது. பருப்பு உற்பத்தியில் முன்னிலையில் உள்ளது. இருப்பினும் நாடு முழுவதிலும் 43 சதவீத குழந்தைகள் ஊட்டச்சத்துக் குறைபாடு உள்ளவர்களாக இருக்கின்றனர். ஒவ்வொரு குழந்தையும் போதிய ஊட்டச்சத்துப் பெற வேண்டும். அதற்கு வளமான வேளாண்மையை அதிகாரிகள் உருவாக்க வேண்டும். அதற்கு, இதுபோன்ற கருத்தரங்குகள் உதவி செய்யும் என்றார்.

நீர் தொழில்நுட்ப மைய இயக்குநர் பி.ஜே.பாண்டியன், பேராசிரியர்கள் கே.அசோகன், கார்த்திகேயன் அதிகாரிகள் முத்தையா மனோகரன், எம்.பாஸ்கரன் உள்ளிட்டோர் கருத்தரங்கில் கலந்து கொண்டனர்.

**"அக்ரி டெக்' விவசாய கண்காட்சி தொடக்கம்**

அக்ரி டெக் என்ற விவசாய கண்காட்சி மதுரை தமுக்கம் மைதானத்தில் வியாழக்கிழமை துவங்கியது. கோவையைச் சேர்ந்த யுனைடெட் டிரேட் பேர்ஸ் இந்தியா நிறுவனம் இந்த கண்காட்சியை நடத்துகிறது. தமுக்கம் மைதானத்தில் இக்கண்காட்சியை மதுரை வேளாண் கல்லூரி விதை அறிவியல் துறைத் தலைவர் கோ.பாலகிருஷ்ணன் துவக்கி வைத்தார். கண்காட்சி அரங்குகளில் வைக்கப்பட்டுள்ள வேளாண் தொழில்நுட்பக் கருவிகளைப் பார்வையிட்ட பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கூறியது: விவசாயம் செய்வதில் இளைஞர்கள் ஆர்வம் காட்டவில்லை.

மழை அளவு குறைந்துள்ளது. இதனால் தேவைக்கு ஏற்ற உற்பத்தியை ஈடுகட்டுவதற்கு பலவகை உத்திகளைக் கையாள வேண்டியுள்ளது. அறுவடை எந்திரம் 100 சதவீதம் பயன்படுத்தப்படுகிறது. நாற்று நடும் இயந்திர பயன்பாடு குறைவாக உள்ளது. சிறிய விவசாயிகளுக்கும் இந்த எந்திரத்தின் பயன் கிடைக்கச் செய்ய வேண்டும். மேலும், உடல்நலத்தை முன்னிட்டு குறுதானிய உற்பத்தியில் விவசாயிகள் அதிக கவனம் செலுத்த வேண்டும். இதற்கான திட்டங்களுக்கு அரசும்,வேளாண் பல்கலைக் கழகமும் முன்னுரிமை அளித்து வருகிறது. குறுதானியங்களை மதிப்பு கூட்டிய பொருள்களாக மாற்றி லாபம் ஈட்ட வேண்டும் என்றார்.

கண்காட்சியில் 100 க்கும் மேற்பட்ட அரங்குகள் உள்ளன. நவீன தொழில்நுட்பங்கள், விவசாய இடுபொருள்கள், புதிய பயிர் ரகங்கள் இடம் பெற்றுள்ளன. இக்கண்காட்சி வரும் 29ஆம் தேதி வரை நடைபெற உள்ளது.

**நீலகிரி, கோவை மாவட்டங்களில் பலத்த மழைக்கு வாய்ப்பு**

தென்மேற்குப் பருவமழை தீவிரமடைந்துள்ளதை அடுத்து நீலகிரி, கோவை மாவட்டங்களில் வெள்ளிக்கிழமை பலத்த மழை பெய்ய வாய்ப்புள்ளது என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்தது.

கேரளத்தில் தொடங்கிய தென்மேற்குப் பருவமழை கேரளம், கர்நாடகம், மகாராஷ்டிரம் ஆகிய மாநிலங்களில் தீவிரமடைந்துள்ளது. தமிழகத்தில் மேற்கு தொடர்ச்சி மலையை ஒட்டியுள்ள பகுதிகளில் பரவலாக பலத்த மழை பெய்து வருகிறது.

குறிப்பாக கோவை, நீலகிரி மாவட்டங்களில் பலத்த மழை பெய்யும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் வெப்பச் சலனத்தின் காரணமாக தமிழகம், புதுவையில் ஆங்காங்கே மழையோ இடியுடன் கூடிய மழையோ பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

## உரம், விதைகள் இருப்பு: விவசாயிகளுக்கு குறுஞ்செய்தி அனுப்ப ஏற்பாடு

விவசாயிகள் பயனடையும் வகையில் உரம், விதைகள் ஆகியவற்றின் இருப்பு தொடர்பாக வேளாண்துறை சார்பில் குறுஞ்செய்தி மூலம் தகவல் தெரிவிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக வேளாண்துறை இணை இயக்குநர்(பொறுப்பு) செண்பகமூர்த்தி செவ்வாய்க்கிழமை கூறியது: விருதுநகர் மாவட்டத்தில் விவசாயிகள் பயனடையும் வகையில் வேளாண் துறை சார்பில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அதில், குறிப்பிட்ட பருவத்தில் ஒரே நேரத்தில் விவசாயிகள் சாகுபடியை மேற்கொள்வர். அப்போது, விற்பனை நிலையங்களில் உரம் மற்றும் விதைகள் பற்றாக்குறை ஏற்படும். அப்போது, ஏற்படும் அலைச்சலையும், குறிப்பிட்ட நேரத்தில் சாகுபடி செய்ய முடியாத நிலையையும் கருத்தில்கொண்டு விற்பனை நிலையங்களைச் சேர்ந்தோர் விதைகள், இடுபொருள்கள் இருப்பு நிலவரம் குறித்து வேளாண்துறைக்கு தகவல் தெரிவிக்க வேண்டும். அதன் அடிப்படையில் அந்தந்த வட்டார வேளாண்மை விரிவாக்க அலுவலகம் மூலம் உரம், விதை இருப்பு குறித்து விவசாயிகளுக்கு குறுஞ்செய்தி மூலம் தகவல் அளிக்கப்படும். அதன்பேரில் இருப்பு உள்ள கடைகளுக்கு சென்று விதை மற்றும் இடுபொருள்களை எளிதாக பெற்றுக் கொள்ள முடியும். இதற்காக மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகத்தில் தகவல் மையம் செயல்படுத்தப்பட்டு வருகிறது என்றார்.

## விவசாயக் கிணறுகளில் நீர்மட்டம் உயர குட்டைகளுக்கு கொண்டு செல்லப்படும் குளத்து நீர்

சூலூர் அருகே கண்ணம்பாளையம் பேரூராட்சியில் உள்ள குட்டைகளுக்கு குளத்து நீர் குழாய் மூலமாக வியாழக்கிழமை கொண்டு செல்லப்பட்டது.

தமிழக அரசின் சிறப்பு தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் கோவை மாவட்டத்திலேயே முதன்முறையாக கண்ணம்பாளையம் பேரூராட்சி, பொதுமக்கள் பங்களிப்புடன் இத்திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.

கண்ணம்பாளையம் குளத்துக்கு, நொய்யல் ஆற்றிலிருந்து பள்ளபாளையம் குளம் வழியாக கால்வாய் மூலமாக தண்ணீர் கொண்டுவரப்படுகிறது. கண்ணம்பாளையம் குளத்தில் தண்ணீர் நிரப்பப்படுவதால், அதை சுற்றிலும் உள்ள விளைநிலங்களில் நிலத்தடி நீர் மட்டம் அதிகரித்து உள்ளது. கிணற்றுப் பாசனத்தின் மூலம் தென்னை, வாழை, துவரை, சோளம், மக்காச்சோளம் உள்ளிட்ட பயிர்கள் பயிரிடப்படுகின்றன.

அதேசமயம், இந்த குளத்துக்கு அருகில் உள்ள பெரும்பாலான விளைநிலங்களில் உள்ள கிணறுகளுக்கு போதுமான தண்ணீர் கிடைக்காமல் இருந்தது. இப்பிரச்னைக்குத் தீர்வுகாணும் வகையில், ஊரில் உள்ள இரு குட்டைகளுக்கு குளத்து நீரை கொண்டு செல்ல ஊர்மக்கள், பேரூராட்சி நிர்வாகம், குளத்துக் கமிட்டியினர் சேர்ந்து திட்டமிட்டனர். அதையடுத்து, குளத்துக்கு அருகில் கிணறு தோண்டி, குழாய்கள் பதித்து குட்டைகளுக்கு தண்ணீர் கொண்டு செல்ல அரசு ஒப்புதலும் பெறப்பட்டது. தமிழக அரசின் சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின் மூலமாக ரூ. 23 லட்சம், குளத்தில் மீன் பிடிப்பதற்கான ஏலத் தொகை ரூ. 23 லட்சம் என மொத்தம் ரூ.46 லட்சம் செலவில் இப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்நிலையில், குளத்துக்கு அருகில் அமைக்கப்பட்ட கிணற்றில் இருந்து சுமார் 2,250 மீட்டர் தூரம் பதிக்கப்பட்ட 10 இஞ்ச் விட்டமுள்ள குழாய்களில் மின் மோட்டார் மூலமாக அரசுப் பள்ளிக்கு பின்புறமுள்ள குட்டைக்கும், கலங்கல் பாதையில் உள்ள குட்டைக்கும் தண்ணீர் கொண்டு செல்லப்பட்டது. இதன் துவக்க நிகழ்ச்சிக்கு வியாழக்கிழமை

பேரூராட்சித் தலைவர் முருகேசன் தலைமையில் வகித்தார். குளத்துக் கமிட்டி பொருளாளர் நவநீதகிருஷ்ணன் முன்னிலை வகித்தார். வார்டு உறுப்பினர் கே.என் சண்முகம் வரவேற்றார். குளத்துக் கமிட்டி தலைவர் சந்திரசேகர் பெயர்ப் பலகையை திறந்து வைத்தார். பேரூராட்சி செயல் அலுவலர் கே.ஆர்.ரேணுகா மின் மோட்டாரை இயக்கி வைத்தார்.

சூலூர் வட்டார வளர்ச்சி அலுவலர் ரவிச்சந்திரன், குட்டைகளுக்கு செல்லும் குழாய்களின் வால்வுகளை இயக்கி வைத்தார்.

குட்டைகளுக்கு தண்ணீர் நிரப்புவதன் மூலமாக சுற்றியுள்ள கிணற்றுகளில் நீர்மட்டம் அதிகரித்து, விவசாயத்திற்குத் தேவையான தண்ணீர் கிடைக்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. மேலும், இங்குள்ள குளம், குட்டைகளில் மீன் குஞ்சுகள் வளர்க்கப்பட்டு மீனவர்களின் வாழ்வாதாரமும் இதன் மூலமாக மேம்பட வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

**வேளாண் திட்டங்களைப் பயன்படுத்தி விவசாயிகள் உயர்வடைய வேண்டும்**

வேளாண் துறை திட்டங்களை பயன்படுத்தி விவசாயிகள் தங்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ள வேண்டும் என்று மாவட்ட ஆட்சியர் கு.கோவிந்தராஜ் பேசினார். வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை சார்பில், விவசாயிகள் - வியாபாரிகள் கலந்தாய்வு கூட்டம், திருப்பூர் ஆட்சியர் அலுவலகத்தில் வியாழக்கிழமை நடைபெற்றது.

வேளாண் துணை இணை இயக்குநர் கனகசபை வரவேற்றார். ஈரோடு விற்பனைக் குழு செயலாளர் முருகானந்தம், கோவை வேளாண் துறை துணை இயக்குநர் கலைவாணி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்துக்கு தலைமை வகித்து ஆட்சியர் கு.கோவிந்தராஜ் பேசியது:

விவசாயிகளுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்திடவும், விலை பொருள்களுக்கு நியாயமான விலை கிடைக்கும் வகையிலும் அரசு பல திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அவிநாசி, சேவூர், பெதப்பம்பட்டி, மடத்துக்குளம், பொங்கலூர், பல்லடம் உள்ளிட்ட பகுதிகளில் கிடங்கு வசதிகளும், வெள்ளக்கோவில், முத்தூர் ஆகிய பகுதிகளில் பரிவர்த்தனைக் கூடம் வசதிகளும், அவிநாசி, பல்லடம், உடுமலைபேட்டை, பொங்கலூர், பெதப்பம்பட்டி, வெள்ளக்கோவில் பகுதிகளில் குளிர்பதனக் கிடங்கு வசதியும், வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிக துறையின் மூலம் அமைக்கப்பட்டுள்ளது.

கிடங்குகளில் வைக்கப்படும் விவசாய பொருள்களுக்கு 15 தினங்களுக்கு வாடகை இல்லை. கடனுதவிகளுக்கு 5 சதவீத வட்டி பெறப்படுகிறது. விவசாயிகள் ஒழுங்குமுறை விற்பனை கூடங்களை அதிகளவில் பயன்படுத்தி கொள்ள வேண்டும். மேலும் விவசாய பொருள்களுக்கு மதிப்பு கூட்டும் தொழில் நுட்ப பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது. விவசாயிகளின் உற்பத்தி பொருள்களுக்கு நியாயமான விலை கிடைக்க இது போன்ற கூட்டங்கள் உதவிகரமாக இருக்கும். இதை பயன்படுத்தி விவசாயிகள் தங்கள் வாழ்க்கை தரத்தை உயர்த்தி கொள்ள வேண்டும் என்றார்.

கோவை வேளாண் விற்பனை குழுச் செயலாளர் ஆறுமுகராஜன், ஈரோடு வேளாண் வணிகத் துறை துணை இயக்குநர் சுப்பிரமணியம் ஆகியோர் துறையில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை, திட்டம் குறித்து விளக்கினர்.

இதில், வேளாண்மை துறை அலுவலர்கள், விவசாயிகள், வியாபாரிகள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**சந்தைக்கு காய்கறிகள் வரத்து அதிகரிப்பு**

பல்லடம், பொங்கலூர், சுல்தான்பேட்டை வட்டாரத்தில் பெய்த மழையால் காய்கறி விளைச்சல் அதிகரித்து சந்தைக்கு வரத்து கூடியுள்ளது.

பல்லடம், பொங்கலூர், சுல்தான்பேட்டை வட்டாரத்தில் பருவ மழையும், கோடை மழையும் நன்றாக பெய்ததால் நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்துள்ளது. இதனால் இப்பகுதிகளில் காய்கறி விளைச்சல் அதிகரித்துள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகளாக தென்னையில் இருந்து போதிய வருமானம் கிடைக்காததால், விவசாயிகள் காய்கறி சாகுபடி செய்யத் துவங்கினர். இதனால் விளைச்சல் அதிகரித்துள்ளது.

கத்தரி, வெண்டை, பீர்க்கங்காய் உள்ளிட்டவை சில்லறை விலையாக கிலோ ரூ. 20-க்கும், தக்காளி மொத்த விலையில் கிலோ ரூ. 13 க்கும் விற்பனை செய்யப்படுகிறது. குறைந்த விலைக்கு விற்பனை செய்தும் காய்கறி முழுவதும் விற்காமல் தேக்கமடைந்து வருவதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

**கேரளத்துக்கு காய்கறிகள் அனுப்ப வலியுறுத்தல்**

கேரள மாநிலத்துக்கு காய்கறிகளை அனுப்ப தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என காங்கிரஸ் கட்சி வலியுறுத்தியுள்ளது.

திருப்பூர் புறநகர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டியின் மாவட்ட, வட்டார நிர்வாகிகள் கூட்டம் அவிநாசியில் வியாழக்கிழமை நடைபெற்றது. கூட்டத்துக்கு, புறநகர் மாவட்டத் தலைவர் வெங்கடாசலம் தலைமை வகித்தார். மாவட்டப் பொருளாளர் பாலசுப்பிரமணியம், மாவட்டத் துணைத் தலைவர் அவிநாசியப்பன் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர். மாநிலத் துணைத் தலைவர் தாமோதரன் சிறப்புரையாற்றினார்.

மாவட்டத்திலுள்ள குளங்களில் விதிமுறைகளை மீறி மணல் அள்ளுபவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும்.

திருப்பூர், கோவை மாவட்டங்களில் இயங்கி வரும் 2 லட்சம் விசைத்தறிகளில் உற்பத்தியாகும் காடாத் துணிகள் கடந்த 6 மாதமாக விற்பனை செய்ய முடியாமல் தேக்கம் அடைந்துள்ளன. இதற்கு மத்திய அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்து ஜவுளித் தொழிலைக் காப்பாற்ற வேண்டும். தமிழகத்திலிருந்து அனுப்பப்படும் காய்கறிகளில் பூச்சிக்கொல்லி மருந்து இருப்பதாக கேரள அரசு தவறான கருத்தை பரப்பி வருகிறது. எனவே, தமிழக அரசு இதுகுறித்து அம்மாநில அரசுக்கு விளக்கம் அளித்து தேங்கிக் கிடக்கும் காய்கறிகளை கேரளத்துக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**விளைச்சல் அதிகம்: மல்லிகை விலை சரிவு**

சத்தியமங்கலத்தில் மல்லிகையின் உற்பத்தி அதிகரித்துள்ளதால் விலை கிலோ ரூ.80 ஆக சரிந்துள்ளது. சத்தியமங்கலம் வட்டாரத்தில் சுமார் 50 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் மல்லிகை, முல்லை, கனகாம்பரம், செண்டுமல்லி ஆகியவை சாகுபடி செய்யப்படுகிறது. இந்தப் பூக்கள் சத்தியில் உள்ள தமிழ்நாடு மலர்கள் உற்பத்தியாளர்கள் சங்கத்தில், வியாபாரிகள் முன்னிலையில் ஏலம் விடப்படுகின்றன.

இந்நிலையில், மல்லிகையின் வரத்து அதிகரித்துள்ளதால் விலை சரிந்துள்ளது. கிலோ ரூ.500- வரை விற்கப்பட்ட மல்லிகைப் பூ, வியாழக்கிழமை ரூ.80-ஆக சரிந்தது.

**காலாவதியான பொருள்கள் விற்பனைக்கு தடை விதிக்கக் கோரிக்கை**

காலாவதியான பொருள்கள் விற்பனைக்குத் தடை விதிக்க வேண்டும் என்று பாமக கோரிக்கை விடுத்துள்ளது. இக்கட்சியின் கிழக்கு மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் வீரப்பன்சத்திரத்தில் வியாழக்கிழமை

நடைபெற்றது. மாவட்ட செயலாளர் முத்துகுமார் தலைமை வகித்தார். பாமக மாநில துணைப் பொதுச்செயலாளர் பொ.வை.ஆறுமுகம் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றுப் பேசினார். மாநில துணைத் தலைவர்கள் வடிவேல், பரமசிவம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இக்கூட்டத்தில், கோவையில் ஜூலை 22-ஆம் தேதி வரை நடைபெறும் கொங்கு மண்டல அரசியல் மாநாட்டுக்கு ஈரோடு கிழக்கு மாவட்டத்தில் இருந்து அதிகமானோர் கலந்துகொள்ள வேண்டும். பெருந்துறை, கருமாண்டிசெல்லிபாளையத்தில் அரசு நிலத்தில் அனுமதியில்லாமல் மணல் எடுப்பதை தடுத்து நிறுத்துவதைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் நடத்துவது. பொட்டலங்களில் அடைத்து விற்கப்படும் தின்பண்டங்கள் காலாவதி தேதி முடிந்தும் விற்கப்படுவதை தடுக்கவேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இதில், மாநில வன்னியர் சங்க துணைத் தலைவர் பரமேஸ்வரன், இளைஞர் அணி துணைச் செயலாளர் வேலு, செயற்குழு உறுப்பினர் ராஜேந்திரன், வன்னியர் சங்க மாவட்டத் தலைவர் பெருமாள், செயலாளர் செல்வம் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

**அரசு கூட்டுறவு ஏல மையத்தில் 90 சதவீதம் தேயிலைத் தூள் விற்பனை**

குன்னூர் அரசு கூட்டுறவு தேயிலை ஏல மையத்தில் 90 சதவீதம் தேயிலைத் தூள் புதன்கிழமை விற்பனையானது.

இந்தாண்டுக்கான 26-ஆவது ஏலம் கூட்டுறவு ஏல மையத்தில் புதன்கிழமை நடைபெற்றது. இதில், மொத்தம் 4.14 லட்சம் கிலோ தேயிலைத் தூள் விற்பனைக்கு வந்தன. அதில், இலை ரகம் 2.49 லட்சம் கிலோவும், டஸ்ட் ரகம் 1.65 லட்சம் கிலோவும் அடங்கும்.

இந்த ஏலத்தில் உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தகர்கள் அதிகளவில் பங்கேற்றனர்.

இந்த வார விலை நிலவரம்: இலை ரகத்தில் சாதாரண ரகம் கிலோ ரூ.60-65 வரையிலும், உயர் ரகம் ரூ.75-84 வரையிலும், டஸ்ட் ரகத்தில் சாதாரண ரகம் ரூ.61-69 வரையிலும், உயர் ரகம் ரூ.75-82 வரையிலும் விலை உயர்ந்துள்ளது. இந்த விலை உயர்வால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**அரசு கூட்டுறவு ஏல மையத்தில் 90 சதவீதம் தேயிலைத் தூள் விற்பனை**

குன்னூர் அரசு கூட்டுறவு தேயிலை ஏல மையத்தில் 90 சதவீதம் தேயிலைத் தூள் புதன்கிழமை விற்பனையானது.

இந்தாண்டுக்கான 26-ஆவது ஏலம் கூட்டுறவு ஏல மையத்தில் புதன்கிழமை நடைபெற்றது. இதில், மொத்தம் 4.14 லட்சம் கிலோ தேயிலைத் தூள் விற்பனைக்கு வந்தன. அதில், இலை ரகம் 2.49 லட்சம் கிலோவும், டஸ்ட் ரகம் 1.65 லட்சம் கிலோவும் அடங்கும்.

இந்த ஏலத்தில் உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தகர்கள் அதிகளவில் பங்கேற்றனர்.

இந்த வார விலை நிலவரம்: இலை ரகத்தில் சாதாரண ரகம் கிலோ ரூ.60-65 வரையிலும், உயர் ரகம் ரூ.75-84 வரையிலும், டஸ்ட் ரகத்தில் சாதாரண ரகம் ரூ.61-69 வரையிலும், உயர் ரகம் ரூ.75-82 வரையிலும் விலை உயர்ந்துள்ளது. இந்த விலை உயர்வால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**நிகழாண்டில் ரூ. 4,897 கோடி விவசாயக்கடன்**

தஞ்சாவூர் மாவட்டத்தில் நிகழாண்டில் வங்கிகள் மூலம் ரூ.4,897 கோடி விவசாயக்கடன் வழங்கப்பட்டுள்ளது என்றார் மாவட்ட ஆட்சியர் என். சுப்பையன்.

தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் வங்கியாளர்கள் ஆய்வுக்கூட்டம், மாவட்ட ஆட்சியர் என். சுப்பையன் தலைமையில் வியாழக்கிழமை நடைபெற்றது. கூட்டத்தில் ஆட்சியர் பேசியது:

தமிழக முதல்வர் புதிதாக தொழில் தொடங்குவதற்கு பல்வேறு உதவிகளை அளித்து வருகிறார். புதிய தொழில் தொடங்கும் திட்டங்களுக்கு வங்கிகள் முழு அளவில் ஆதரவு அளிக்க வேண்டும். குறிப்பாக தொழில் முனைவோருக்கு உடனடியாக கடனுதவி வழங்க வேண்டும். நலிவடைந்தவர்கள், சிறுபான்மையினர், பெண்கள், பிற்படுத்தப்பட்டவர்கள், தாழ்த்தப்பட்ட மற்றும் மலை சாதியினர் முன்னேற்றத்திற்கு வேண்டிய அனைத்து உதவிகளையும் வங்கிகள் செய்ய வேண்டும். தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள வங்கிகள் கடந்த மூன்று மாதங்களில் முந்தைய மாதங்களைவிட அதிகளவில் பல்வேறு கடனுதவிகளை வழங்கியுள்ளது. இது தொடர வேண்டும்.

மாவட்டத் தொழில் மையம் மூலம் தொழில் தொடங்கி வழங்கப்பட்ட விண்ணப்பங்களுக்கு வரும் ஜூலை 10-க்குள் கடன் அனுமதி வழங்க வேண்டும். தஞசாவூர் மாவட்டத்தில் வங்கிகள் மூலம் கடந்தாண்டு ரூ. 4,893 கோடியும், நிகழாண்டில் ரூ. 4,897 கோடியும் விவசாயக் கடன் வழங்கப்பட்டுள்ளது. தாழ்த்தப்பட்ட மற்றும் மலைச்சாதியினருக்கு கடந்தாண்டில் ரூ. 263 கோடியும், நிகழாண்டில் ரூ. 267 கோடியும், மகளிருக்கு கடந்தாண்டில் ரூ.1,299 கோடியும், நிகழாண்டில் ரூ.1,339 கோடியும் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.

அதேபோல் சிறுபான்மையின மக்களுக்கு கடந்த ஆண்டில் ரூ. 621 கோடியும், நிகழாண்டில் ரூ. 707 கோடியும், நலிவடைந்தோருக்கு கடந்தாண்டில் ரூ.2,647 கோடியும், நிகழாண்டில் ரூ.2,879 கோடியும் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது என்றார் ஆட்சியர்.

வங்கியாளர்கள் ஆய்வுக் கூட்டத்தில் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி முதுநிலை மண்டல மேலாளர் எஸ். சித்தார்த்தன், ரிசர்வ் வங்கி உதவிப்

பொது மேலாளர் என். பாலு, நபார்டு வங்கி உதவிப் பொது மேலாளர் என். சுப்பிரமணியன், இந்தியன் ஓவர்சீஸ் வங்கி முதன்மை மேலாளர் கஜேந்திரநாதன், ஊரக வாழ்வாதார இயக்கத் திட்ட இயக்குநர் சிவக்குமார் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

**நீடாமங்கலத்திலிருந்து ராமநாதபுரத்துக்கு 1,250 டன் அரிசி அனுப்பிவைப்பு**

திருவாரூர் மாவட்டம் நீடாமங்கலத்திலிருந்து, ராமநாதபுரம் மாவட்டத்துக்கு 1,250 டன் பொதுக ரக அரிசி சரக்கு ரயில் மூலம் வியாழக்கிழமை அனுப்பிவைக்கப்பட்டது.

பாமணி மத்திய சேமிப்புக் கிடங்கு, சுந்தரக்கோட்டை நவீன அரிசி ஆலை, மன்னார்குடி வட்டக் கிடங்கு ஆகியவற்றிலிருந்து பொது ரக அரிசி 1,250 டன் 100 லாரிகள் மூலம் நீடாமங்கலம் ரயில் நிலையத்துக்கு வியாழக்கிழமை கொண்டுவரப்பட்டது.

பின்னர், அந்த அரிசி மூட்டைகள் சுமை தூக்கும் தொழிலாளர்களைக் கொண்டு சரக்கு ரயிலில் 21 பெட்டிகளில் ஏற்றப்பட்டு, ராமநாதபுரம் பொது விநியோகத் திட்டத்துக்காக அனுப்பிவைக்கப்பட்டது.

**விவசாயிகளுக்கு உடனடியாக மின் இணைப்பு வழங்க வலியுறுத்தல்**

பெரம்பலூர் மாவட்டத்தில் தயார் நிலை பதிவேட்டில் பதிவு செய்துள்ள விவசாயிகளுக்கு உடனடியாக மின் இணைப்பு வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்ட அரங்கில், மாவட்ட ஆட்சியர் (பொ) ப. மதுசூதன் ரெட்டி தலைமையில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வியாழக்கிழமை நடைபெற்றது. கூட்டத்தில் நடைபெற்ற விவாதம்: திருவள்ளுவர் உழவர் மன்றத் தலைவர் கு.

வரதராசன்: பூலாம்பாடி கிழக்குப் பகுதியில் உள்ள அரசுக்கு சொந்தமான இடத்தில், நிகழாண்டுக்கான நெல் கொள்முதல் நிலையம் திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் இந்த இடத்துக்கு அருகே வீடற்ற நபர்களுக்கு ஒதுக்கப்பட்ட 10 ஏக்கர் நிலத்தில் ஆய்வு மேற்கொண்டு வீடு கட்டித்தர வேண்டும். தமிழக ஏரி மற்றும் ஆற்றுப்பாசன விவசாயிகள் சங்க மாநிலத் தலைவர் பூ. விசுவநாதன்: வேப்பந்தட்டை வட்டம், விசுவக்குடி நீர்த்தேக்க திட்டத்தை விரைவாக முடித்து பயன்பாட்டுக்கு கொண்டு வர வேண்டும். கொட்டரை நீர்த்தேக்க திட்டத்துக்கு நிலம் அளிக்கும் விவசாயிகளுக்கு மத்திய அரசின் உத்தரவின்படி, 4 மடங்கு விலை கொடுக்க வேண்டும். கரும்பு, நெல் சாகுபடி செய்வோர் பயன்பெறும் வகையில் பகலில் 8 மணி நேரமும், இரவில் 6 மணி நேரமும் விவசாயத்துக்கு மும்முனை மின்சாரம் விநியோகிக்க வேண்டும்.

தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்டத் தலைவர் என். செல்லதுரை:

பெரம்பலூர் மாவட்டத்தில் கடந்த 6 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டு திறக்கப்படாமல் உள்ள எரிவாயு தகன மேடை, பெருமத்தூர் கால்நடை மருத்துவமனை, சாத்தனூர் கல்மர பூங்கா அருகே கட்டப்பட்டுள்ள சுற்றுலாப் பயணிகள் தங்கும் விடுதி உள்ளிட்ட கட்டடங்களை திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

விவசாயிகள் சங்க நிர்வாகி ராஜு: பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து பால் கொள்முதல் நிலையங்களிலும் உற்பத்தியாளர்கள் கொண்டு செல்லும் பாலை முழுமையாக கொள்முதல் செய்ய வேண்டும். கை.களத்தூர் ஏரியை சீரமைத்து, மழைக்காலத்தில் நீரை தேக்கி வைக்க மதகுகளையும், இந்த கிராமத்தில் உள்ள விளையாட்டு மைதானத்தையும் சீரமைக்க வேண்டும். தமிழக விவசாயிகள் சங்க மாநிலச் செயலர் ஆர். ராஜாசிதம்பரம்: விவசாயிகள் பாசன மின் இணைப்புக்காக தயார் நிலை பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டு பல ஆண்டுகள் கடந்தும், இதுவரை

மின் இணைப்பு வழங்காமல் அலைக்கழிக்கப் படுகின்றனர். எனவே, உடனடியாக மின் இணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். தொடர்ந்து, விவசாயிகளின் கோரிக்கைகளுக்கு விளக்கம் அளித்து பயிர் பாதுகாப்பு குறித்த கையேட்டை வெளியிட்டார் மாவட்ட ஆட்சியர் (பொ) ப. மதுசூதன் ரெட்டி. கூட்டத்தில் வேளாண் இணை இயக்குநர் (பொ) அய்யாசாமி, வேளாண்மை துணை இயக்குநர் (பொ) எஸ். சேகர், தோட்டக்கலை துணை இயக்குநர் (பொ) மா. இந்திரா, கூட்டுறவு இணைப்பதிவாளர் சிவ. முத்துகுமாரசாமி, பால்வளத் துறை துணைப் பதிவாளர் பாலசுந்தரம் உள்பட விவசாயிகள் சங்க பிரமுகர்கள் பலர் பங்கேற்றனர்.

**கார் சாகுபடிக்கு கூடுதல் தண்ணீர் திறக்க திமுக வலியுறுத்தல்**

கார் சாகுபடிக்கு தூத்துக்குடி மாவட்டத்துக்கு கூடுதல் தண்ணீர் திறந்துவிட வேண்டும் என திமுக வலியுறுத்தியுள்ளது.

இதுகுறித்து தெற்கு மாவட்ட திமுக செயலர் என். பெரியசாமி வெளியிட்ட அறிக்கை: தூத்துக்குடி மாவட்டத்துக்கு கார் சாகுபடிக்கு அனுமதிக்கப்பட்டு, பாபநாசம் அணையில் இருந்து தினமும் 1500 கனஅடி வீதம் 143 நாள்களுக்கு தண்ணீர் திறந்துவிடப்படும் என்ற உத்தரவாதத்தின் பேரில் சாகுபடி பணிகள் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. ஆனால், தற்போது திறந்துவிடப்படும் தண்ணீரின் அளவோ 1050 கனஅடியாக உள்ளது. அதிலும், 500 கனஅடி தண்ணீர் தொழிற்சாலைகளுக்கு போக மீதம் 550 கனஅடி தண்ணீர்தான் விவசாயத்துக்கு வருகிறது. இதனால், தாமிரவருணி வடகால், தென்கால் பாசன விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும், தண்ணீர் செல்லும் கால்வாய்கள் அனைத்தும் செடி, கொடிகள் சூழ்ந்து தண்ணீர் செல்ல முடியாத நிலையில் உள்ளன. இதனால், கடைசி குளமான கோரம்பள்ளம் குளம் வரை தண்ணீர் வருவது கடினமாக

உள்ளது. எனவே, தூத்துக்குடி மாவட்ட கார் சாகுபடிக்கு கூடுதல் தண்ணீர் திறந்துவிட மாவட்ட ஆட்சியர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**கார் சாகுபடிக்கு கூடுதல் தண்ணீர் திறக்க திமுக வலியுறுத்தல்**

கார் சாகுபடிக்கு தூத்துக்குடி மாவட்டத்துக்கு கூடுதல் தண்ணீர் திறந்துவிட வேண்டும் என திமுக வலியுறுத்தியுள்ளது.

இதுகுறித்து தெற்கு மாவட்ட திமுக செயலர் என். பெரியசாமி வெளியிட்ட அறிக்கை: தூத்துக்குடி மாவட்டத்துக்கு கார் சாகுபடிக்கு அனுமதிக்கப்பட்டு, பாபநாசம் அணையில் இருந்து தினமும் 1500 கனஅடி வீதம் 143 நாள்களுக்கு தண்ணீர் திறந்துவிடப்படும் என்ற உத்தரவாதத்தின் பேரில் சாகுபடி பணிகள் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. ஆனால், தற்போது திறந்துவிடப்படும் தண்ணீரின் அளவோ 1050 கனஅடியாக உள்ளது. அதிலும், 500 கனஅடி தண்ணீர் தொழிற்சாலைகளுக்கு போக மீதம் 550 கனஅடி தண்ணீர்தான் விவசாயத்துக்கு வருகிறது. இதனால், தாமிரவருணி வடகால், தென்கால் பாசன விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும், தண்ணீர் செல்லும் கால்வாய்கள் அனைத்தும் செடி, கொடிகள் சூழ்ந்து தண்ணீர் செல்ல முடியாத நிலையில் உள்ளன. இதனால், கடைசி குளமான கோரம்பள்ளம் குளம் வரை தண்ணீர் வருவது கடினமாக உள்ளது. எனவே, தூத்துக்குடி மாவட்ட கார் சாகுபடிக்கு கூடுதல் தண்ணீர் திறந்துவிட மாவட்ட ஆட்சியர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'கூட்டுறவு பயிர்கடன் ரத்து கிடையாது'

**தினமலர்**

**இன்றைய வேளாண் செய்திகள்**

**'கூட்டுறவு பயிர்கடன் ரத்து கிடையாது'**

ஆத்துார்:“கூட்டுறவு சங்கம் மூலம் விவசாய கடனாக, 5,500 கோடி ரூபாய் வழங்கப்படும். ஆனால், கூட்டுறவு கடன் ரத்து திட்டம் எதுவும் கிடையாது," என, கூட்டுறவுத்துறை பதிவாளர் ஜெயஸ்ரீ கூறினார்.சேலம் மாவட்டம், ஆத்துார், பைத்துார் ரோடு பகுதியில் உள்ள தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தின் சேமிப்பு கிடங்கில், ஜெயஸ்ரீ தலைமையிலான அதிகாரிகள், நேற்று ஆய்வு செய்தனர். பின், ஜெயஸ்ரீ, நிருபர்களிடம் கூறியதாவது: கூட்டுறவுத்துறை, லாபத்துடன் இயங்கி வருகிறது. கூட்டுறவு கடன்கள், 95 சதவீதம் வசூல் செய்யப்படுகிறது. 2014 - -15ல், கூட்டுறவு சங்கங்கள் மூலம், 5,280 கோடி ரூபாய், விவசாய கடனாக வழங்கப்பட்டது. 2015 - -16ல், 5,500 கோடி ரூபாய் வரை விவசாய கடன் வழங்க, தமிழக அரசு முடிவு செய்துள்ளது. கூட்டுறவு கடன்களை ரத்து செய்யும் திட்டம் எதுவும் இல்லை.

இவ்வாறு, அவர் தெரிவித்தார். விவசாயிகள், கூட்டுறவு சங்கங்களில் பெற்ற விவசாய கடன்களை ரத்து செய்ய வேண்டும் என, வலியுறுத்தி வருகின்றனர். இதற்காக, ஜூலை இறுதியில், தலைமைச்செயலகம் எதிரில் ஆர்ப்பாட்டம் நடத்தப் போவதாகவும் அறிவித்துள்ளனர்.

இந்நிலையில், கூட்டுறவு சங்கங்கள் மூலம் வழங்கப்பட்ட விவசாய கடனை ரத்து செய்யும் திட்டம் இல்லை என, ஜெயஸ்ரீ திட்டவட்டமாக தெரிவித்து உள்ளார்.

## தேனி வனத்தில் கேரள ஆக்கிரமிப்பு

கம்பம்:கம்பம்மெட்டிலிருந்து போடிமெட்டு வரை உள்ள தமிழக வனப்பகுதிகளை கேரளாவைச் சேர்ந்தவர்கள் படிப்படியாக ஆக்கிரமித்து வருகின்றனர். தமிழக வனத்துறை அதிகாரிகள் சம்பந்தப்பட்ட வனப்பகுதிகளை நேரடியாக ஆய்வு மேற்கொண்டு துவக்கத்திலேயே இதை தடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.கேரளா இடுக்கி மாவட்டம் கம்பம்மெட்டிலிருந்து போடி மெட்டு வரை, கேரளாவை ஒட்டி தமிழக வனப்பகுதிகள் அமைந்துள்ளன. அதேபோன்று கம்பம்மெட்டிலிருந்து குமுளி வரையிலும் தமிழக வனப்பகுதிகள் உள்ளன. குமுளிஅருகே ஆசாரிபள்ளம் பகுதியில் கேரளாவை சேர்ந்த கும்பல் தமிழக வனப்பகுதிகளை ஆக்கிரமிப்பு செய்தது. கடந்த 15 ஆண்டுகளுக்கு முன்பு 250 ஏக்கர் வரை மீட்கப்பட்டது. அப்போதே 150 ஏக்கர் வரை ஆக்கிரமிப்பை அகற்ற முடியாமல் வனத்துறையினர் திரும்பினர்.

இந்நிலையில், கம்பம்மெட்டு முதல் போடிமெட்டு வரை தமிழக வனப்பகுதிகள் பல இடங்களில் கேரள மாநிலத்தவரால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது. குறிப்பாக உடுப்பன்சோலை தாலுகா, துாக்குபாலம் அருகில் புஷ்பகண்டம் பகுதியில் சிலர் ஆக்கிரமிப்பு செய்துள்ளனர்.

புஷ்பகண்டம் பகுதியில் சர்வே செய்வது தொடர்பாக உடுப்பன்சோலை தாசில்தாருக்கும், உத்தம பாளையம் தாசில்தாருக்கும் தமிழக வனத்துறை கடந்த ஆண்டு கடிதம் ஒன்றை எழுதியது. இருமாநில வருவாய்த்துறையினரை வைத்து சம்பந்தப்பட்ட இடத்தை சர்வே செய்து முடிவு செய்யப்படும் என்று வனத்துறை கூறியது. ஆனால் இதுவரை சர்வே செய்யப்படவில்லை. இந்நிலையில் கம்பம்மெட்டிலிருந்து போடிமெட்டு வரை பல இடங்களில் தமிழக வனப்பகுதிகளில் கேரள மாநிலத்தை சேர்ந்தவர்கள் ஆக்கிரமிப்பு செய்வது தொடர்கிறது.

கம்பம்மெட்டிலிருந்து போடி மெட்டு வரை தமிழக, கேரள வன எல்லையை நிர்ணயம் செய்ய வேண்டும். ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ள

தமிழக பகுதிகளை மீட்க வனத்துறையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**திருப்பூரில் வேளாண் விற்பனை குழு தோற்றுவிக்க...கருத்துரு! முயற்சியை தீவிரப்படுத்த மாவட்ட நிர்வாகம் உறுதி**



திருப்பூர்:""திருப்பூர் மாவட்டத்தில் வேளாண் விற்பனை குழு தோற்றுவிக்க, அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது; அதற்கான முயற்சிகள் தீவிரமாக்கப்படும்,'' என, கலெக்டர் கோவிந்தராஜ் உறுதியளித்தார்.

வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை சார்பில், விவசாயிகள் - வியாபாரிகள் கலந்தாய்வு கூட்டம், திருப்பூர் கலெக்டர் அலுவலகத்தில் நேற்று நடந்தது.விவசாயிகள் பேசியதாவது:

திருப்பூர் மாவட்டத்துக்கென வேளாண் விற்பனைக்குழு ஏற்படுத்த வேண்டும். செயலாளர்களுக்கு கூடுதல் செலவின அதிகாரம் வழங்க வேண்டும். அரசு வழங்கிய கம்ப்யூட்டர்களை பயன்படுத்தாமல் இருப்பதால், தேவையான ஆப்ரேட்டர் பணியமர்த்த வேண்டும். தாராபுரம் ஒழுங்குமுறை விற்பனை கூடம், வாடகை கட்டடத்தில் இயங்குகிறது.

அலங்கியத்தில் கூடுதல் தேங்காய் உலர்களம் அமைக்க வேண்டும். கண்வலி கிழங்கு விதையை இருப்பு வைக்க அனுமதித்துள்ளதுபோல், பொருளீட்டு கடன் வழங்கவும், வேளாண் விற்பனை குழு மூலமாக விற்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். திருப்பூர் மாவட்டத்தில் பட்டு வளர்ப்பு அங்காடி அமைக்க வேண்டும். குண்டடம் ஒன்றிய பகுதியில், புதிய ஒழுங்குமுறை விற்பனை கூடம் வேண்டும். திருப்பூர் மாவட்டத்தில், 13 விற்பனை கூடங்கள் இருப்பதால், வேளாண் விற்பனை குழு தோற்றுவிக்க வேண்டும்.இவ்வாறு, அவர்கள் கூறினர்.

கலெக்டர் பேசியதாவது:விவசாயம், இரண்டு மடங்கு வளர்ச்சி பெற வேண்டும்; விவசாயி, மூன்று மடங்கு வருவாய் பெற வேண்டும் என்ற நோக்கத்தில் தமிழக அரசு, வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறையை செயல்படுத்தி வருகிறது. இடைத்தரகர் தயவின்றி, விளைபொருட்களை நியாயமான விலைக்கு விவசாயிகள் விற்கலாம். சரியான விலை கிடைக்கும் வகையில், கட்டணமின்றி தானியங்களை இருப்பு வைக்கலாம். இருப்பு வைக்கும் தானியத்துக்கு பொருளீட்டு கடன் பெறலாம். விவசாயிகளுக்கு ஐந்து சதவீத வட்டியிலு<ம், வியாபாரிகளுக்கு ஒன்பது சதவீத வட்டியிலும் பொருளீட்டு கடன் வழங்கப்படுகிறது.

திருப்பூர் மாவட்டத்தில், கடந்த நிதியாண்டில், 76 ஆயிரத்து, 681 மெட்ரிக் டன் அளவிலான பொருட்கள் பரிவர்த்தனை செய்யப்பட்டுள்ளன. நம் மாவட்டத்துக்கு, 84 ஆயிரத்து, 720 மெட்ரிக் டன் இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்ததில், 91 சதவீதத்தை எட்டியுள்ளோம். 1.81 கோடி ரூபாய் பொருளீட்டு கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, 1.63 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. வேளாண் விற்பனை குழு அமைக்க அரசுக்கு பரிந்துரைத்து, கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது;

இம்முயற்சி தீவிரப்படுத்தப்படும். கண்வலி கிழங்கு விதைகளுக்கு பொருளீட்டு கடன் வழங்கவும் அரசுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.இவ்வாறு, கலெக்டர் பேசினார்.

வேளாண் துணை இணை இயக்குனர் கனகசபை வரவேற்றார். கோவை வேளாண் விற்பனை குழு செயலாளர் ஆறுமுகராஜன், ஈரோடு வேளாண் வணிகத்துறை துணை இயக்குனர் சுப்ரமணியம் ஆகியோர், துறையில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை, திட்டம் குறித்து விளக்கினர். ஈரோடு விற்பனை குழு செயலாளர் முருகானந்தம், கோவை வேளாண்துறை துணை இயக்குனர் கலைவாணி முன்னிலை வகித்தனர்.

**பெரியாறு அணை நீர்மட்டம் 122 அடியை எட்டியது:முதல் போகத்திற்கு பிரச்னையில்லை**




கூடலூர்:பெரியாறு அணைக்கு நீர்வரத்து அதிகரித்து நீர்மட்டம் 122 அடியை எட்டியதால், கம்பம் பள்ளத்தாக்கு முதல் போக நெல் சாகுபடிக்கு தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட வாய்ப்பில்லை.கேரளாவில் பெய்து வரும் தென்மேற்கு பருவமழை தீவிரமடைந்து, பெரியாறு அணை நீர்பிடிப்பு பகுதியில் கடந்த ஒரு வாரமாக கன மழை பெய்து வருகிறது. இதனால், அணைக்கு நீர்வரத்து வெகுவாக அதிகரித்தது. நேற்று மாலை நிலவரப்படி அணையின் நீர்மட்டம் 122 அடியாக இருந்தது. நீர்வரத்து

2463 கன அடியாகவும், தமிழகப்பகுதிக்கு நீர்திறப்பு 400 கன அடியாகவும் இருந்தது. நீர் இருப்பு 2964 மில்லியன் கன அடியாகும். பெரியாறில் 52.4 மி.மீ., தேக்கடியில் 31 மி.மீ., மழை பதிவானது. நீர்பிடிப்பு பகுதியில் தொடர்ந்து மழை பெய்து வருவதால் அணையின் நீர்மட்டம் மேலும் உயரும் வாய்ப்புள்ளது.

அணையின் நீர்மட்டம் 122 அடியானதைத் தொடர்ந்து, கம்பம் பள்ளத்தாக்கில் முதல் போக நெல் சாகுபடிக்கு, தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட வாய்ப்பில்லை. இதனால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். மேலும் நீர்பிடிப்பு பகுதியில் கன மழை பெய்து அணையின் நீர்மட்டம் 136 அடியை கடந்துவிட்டால், இரண்டாம் போக நெல் சாகுபடிக்கும் தண்ணீர் பற்றாக்குறையின்றி செய்ய முடியும் என்ற எதிர்பார்ப்பில் விவசாயிகள் உள்ளனர். நேற்றைய மழையளவு: பெரியாறு அணை 52 மி.மீ., தேக்கடி 31, கூடலுார் 01.05 அளவில் மழை பதிவானது. வைகைக்கு வரத்து 81 கன அடி. வெளியேற்றம் 60. சோத்துப்பாறை வரத்து இல்லை. வெளியேற்றம் 67 கன அடி. மஞ்சளாறு வரத்து இல்லை. வெளியேற்றம் 120. சண்முகாநதி வரத்து, வெளியேற்றம் இல்லை. மருதாநதி வரத்து இல்லை. வெளியேற்றம் 12 கன அடி. சாத்தையாறு வரத்து, வெளியேற்றம் இல்லை.--

## ராசிபுரத்தில்பச்சைப்பயறு அதிகளவில் விளைச்சல்: விவசாயிகள் மகிழ்ச்சி

ராசிபுரம்: பச்சைப்பயறு அதிகளவில் விளைச்சலால், கிலோ ஒன்றுக்கு, 55 முதல் 70 ரூபாய் வரை கிடைப்பதால், ராசிபுரம் அதன் சுற்றுவட்டாரத்தை சேர்ந்த விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். ராசிபுரம், ஆர்.புதுப்பட்டி, பட்டணம், முருகங்கப்பட்டி, மகாளிப்பட்டி, கட்டணாச்சம்பட்டி, அத்தனூர், தேங்கல்பாளையம், ஆர்.புதுப்பாளையம், குருசாமிபாளையம், அணைப்பாளையம், புதுச்சத்திரம் உள்ளிட்ட அதன் சுற்று வட்டாரப்பகுதிகளில், கடந்த மூன்று மாதமாக ஆங்காங்கே

லேசான மற்றும் பரவலாக மழை பெய்தது. இதனால், விவசாய நிலங்களின் ஈரப்பதம் அதிகரித்தது. இதனை பயன்படுத்தி பல ஏக்கரில் பச்சை பயறு சாகுபடி செய்யப்பட்டது. இந்நிலையில், செடிகள் நன்கு வளர்ந்து அதிகளவில் காய் பிடித்துள்ளது. இதன் அறுவடை துவங்கியுள்ளது. இதில், திரட்சியான மணிகள் கிடைத்து அதிக அளவில் மகசூல் கிடைத்துள்ளது. இது குறித்து முருங்கப்பட்டி பகுதியை சேர்ந்த விவசாயி ஒருவர் கூறியதவாது: இப்பகுதியில், கடந்த மூன்று மாதங்களில் பரவலாக மழை பெய்தது. இதனால், கிணறு மற்றும் நிலத்தடி நீர் மட்டம் உயர்ந்தது. மேலும் விவசாய நிலங்களின் ஈரப்பதம் அதிகமாக இருந்தது. இந்த ஆண்டு பருவமழை விவசாயிகளின் கண்ணீரை துடைத்துள்ளது. இதை பயன்படுத்தி அதிகளவில் பச்சைப்பயறு பயிரிடப்பட்டது. இப்பயிர் செழித்து வளர்ந்து காய்பிடிக்க இயற்கை உரங்கள் மட்டும் போதுமானது. அதிகளவில் தண்ணீர் தேவை இருக்காது. இந்த பயறு விதைத்த நாளில் இருந்து, மூன்றாவது மாதத்தில் இருந்து இரண்டு "போகம்' பலன் தரக்கூடயது. காய்பிடிக்கும் தருணத்தில் பூச்சிக்கொல்லி நோயினை கட்டுப்பட்டுத்த "டிரைக்கோடிர்மா' அல்லது டி.ஏ.பி., என்ற கரைசலை நீரில் கலந்து தெளித்தால் போதுமானது. தற்போது அறுவடை பணி துவங்கியுள்ளது. அறுவைடை செய்யப்பட்ட முதல் விளைச்சல் பச்சைப்பயறுகளை வெளி மாநிலங்களுக்கும், விதை கொள்முதல் நிறுவனத்திற்கும் (தனியார் உரக்கடை) அனுப்பி வைக்கப்படுகிறது.

இரண்டாவது "போகம்' விளைச்சலை தங்களின் வீட்டு பயன்பாட்டுக்கும், பொதுமக்களின் வீட்டு தேவைகளுக்கும் விற்பனை செய்யப்படுகிறது. தற்போது ஒரு கிலோ ரகம் வாரியாக, 55 ரூபாய் முதல் 70 ரூபாய் வரை கிடைக்கிறது. கடந்த ஆண்டு பச்சைப்பயிறு கிலோ ஒன்றுக்கு 45 ரூபாய் முதல் 50 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டது. இவ்வாறு அவர் கூறினார்.

**எல்.பி.பி.,யில் முன்னதாக தண்ணீர் திறக்க எதிர்பார்ப்பு! நோய் தாக்குதல் குறையும் என நம்பிக்கை**

ஈரோடு: நோய் தாக்குதலில் இருந்து, நெற்பயிரை காப்பாற்ற, எல்.பி.பி.,யில், இந்தாண்டு முன் கூட்டிய தண்ணீர் திறந்துவிட வேண்டும், என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. எல்.பி.பி., பாசனத்துக்கு உட்பட்டு, 2.07 லட்சம் ஏக்கர் உள்ளது. ஆண்டுதோறும், 1,03,500 ஏக்கர் பாசனத்துக்கு மட்டும், நெல் சாகுபடிக்கு நீர் வினியோகிக்கப்படுகிறது. அதன்பின் எண்ணெய் வித்து உள்ளிட்ட குறுகிய கால பயிர்களுக்கு முறை வைத்து நீர் வினியோகிக்கப்படுகிறது. தடப்பள்ளி, அரக்கன்கோட்டை மற்றும் காலிங்கராயனுக்கு, இதுவரை நீர் வினியோகிக்கப்படவில்லை. பனிக்காலத்தில் நெற்பயிர் நோய் தாக்குதலால் வெகுவாக பாதிக்கப்படும். எனவே அதிகளவில் மருந்து தெளிக்க வேண்டி வரும். இதனால் நெல், அரிசியின் தரம் கேள்விக்குறியாகும் என்று விவசாயிகள் கூறுகின்றனர். பவானிசாகர் அணையின் நீர்மட்டம் தற்போது, 77 அடியாக உள்ளது. அணைக்கு, 12,500 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. நோய் பாதிப்பில் இருந்து பயிரை காப்பாற்ற, எல்.பி.பி.,யிலும் இந்தாண்டு முன் கூட்டியே, ஜூலை 1ம் தேதி தண்ணீர் திறக்க ஆவண செய்ய வேண்டும். மழை காலத்தில் அணையில் தேக்கி வைக்க முடியாமல், நீர் வீணாவதை தவிர்க்க முடியும் என்று விவசாயிகள் யோசனை தெரிவிக்கின்றனர்.

குறைந்த நீரில், சீசன் காலத்தில் அதிக விளைச்சலை விவசாயத்தில் பெறுவது குறித்து, ஏற்கனவே வேளாண் துறை சார்பில் ஆலோசனை கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளது. எனவே ஆக., 15க்கு பதில், முன் கூட்டியே நீர் வினியோகம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது, விவசாயிகள் எதிர்பார்ப்பாகும்.

இதுகுறித்து சிறு, குறு விவசாயிகள் நல சங்க அமைப்பாளர் சண்முகம்

கூறியதாவது:

பவானிசாகர் அணைக்கு தண்ணீர் அதிகளவில் வருகிறது. மழை காலத்தில், விவசாயத்துக்கு நீர் வினியோகிக்க வேண்டும். பனி காலத்தில் விவசாயத்துக்கு நீர் விடும் பட்சத்தில், நோய் தாக்குதலால் பாதிக்கப்படும். அதிகளவில் மருந்து தெளிக்க வேண்டி வரும். ஆக., 15ல் தான், எல்.பி.பி.யில் தண்ணீர் திறக்கின்றனர். மாறாக முன் கூட்டியே ஜூலை, 1ம் தேதி நீர் திறக்க வேண்டும். அவ்வாறு செய்தால் நோய் தாக்குதலில் இருந்து பயிரை காக்கலாம். உழவு பணி, நாற்று நடவு உள்ளிட்டவற்றுக்கு, ஒரு மாதம் வரை ஆகும். அப்போது குறைந்த அளவிலான நீர் மட்டுமே தேவைப்படும். ஆனால் ஆக., 15க்கு பின், இப்பணிகளை மேற்கொள்ளும்பட்சத்தில், ஒரு மாதம் வீணாகிவிடும். அதன் பின் பனிக்காலம் துவங்கி விடும். அப்போது அதிகளவில் மருந்து தெளிக்க வேண்டி இருக்கும். பருவ நிலை மாற்றத்தால் ஏற்படும் பிரச்னைகளை கண்காணித்து, அரசுக்கும், விவசாயிகளுக்கும் நலன் பயக்கும் வகையிலான நடவடிக்கை எடுக்க, அதிகாரிகளுக்கு நேரமும் இல்லை. மனமும் இல்லை. இதனால், அதிகளவிலான நீர் கடலில் கலக்கிறது. எனவே நீர் வரத்து, நீர் இருப்பு மட்டுமின்றி, நீர் வினியோக காலத்தை கருத்தில் கொண்டு, எல்.பி.பி., பாசனத்துக்கு முன் கூட்டியே, இந்தாண்டு நீர் வினியோகிக்க வேண்டும், என்றார்.

## பவானிசாகர் நீர்மட்டம் 77 அடியாக அதிகரிப்பு

சத்தியமங்கலம்: பவானிசாகர் அணைக்கு தொடர்ந்து தண்ணீர் வரத்து அதிகரித்து வருவதால், அணையின் நீர்மட்டம் உயர்ந்து, 77 அடியை தாண்டியது.

சத்தியமங்கலம் அடுத்துள்ளது பவானிசாகர் அணை. தென்னிந்தியாவிலேயே மிகப்பெரிய மண் அணை என்ற பெருமை

கொண்டதாகும். இந்த அணையின் நீர்வள ஆதாரங்களாக, நீலகிரி மலைப்பகுதி விளங்குகிறது. இந்த மலையில் இருந்து வரும் பவானி ஆறு மற்றும் மோயாறு மூலம் வரும் தண்ணீர், பவானிசாகர் அணையின் நீர்தேக்க பகுதியில் கலக்கிறது. கடந்த, 20ம் தேதி அணையின் நீர்மட்டம், 66.55 அடியாக இருந்தது. நேற்று மாலை அணையின் நீர்மட்டம், 77.35 அடியாக உயர்ந்தது. பவானிசாகர் அணையின் நீர்மட்டம், கடந்த, ஐந்து நாட்களில் பத்து அடி அதிகரித்துள்ளது குறிப்பிடத்தக்கது. நேற்று மாலை அணைக்கு வினாடிக்கு, 12,700 கனஅடி தண்ணீர் வந்தது. அணையில் இருந்து பவானி ஆற்றில் வினாடிக்கு, 200 கனஅடியும், கீழ்பவானி வாய்க்காலில் வினாடிக்கு, 5 கனஅடி தண்ணீரும் திறக்கப்படுகிறது. அணையின் நீர்மட்டம் தொடர்ந்து அதிகரித்து வருவதாலும், அணைக்கு தொடர்ந்து தண்ணீர் வரத்து அதிகமாக வருவதாலும், ஈரோடு மாவட்ட விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.தொட ர்ந்து இதுபோல, சில நாட்களுக்கு நீர் வரத்து இருந்தால், பவானிசாகர் அணை நிரம்ப வாய்ப்புள்ள து. அவ்வாறு நிரம்பி, பருவமழையும் கைகொடுத்தால், இரண்டு பருவத்துக்கு, பாசன நீர் பிரச்னை இருக்காது, என விவசாயிகள் கருதுகின்றனர்.

**மரபணு மாற்று விதைகளுக்குதடை விதிக்க வலியுறுத்தல்**

குன்னுார்:'மரபணு மாற்று விதைகளுக்கு தடை விதிக்க வேண்டும்' என, வலியுறுத்தப்பட்டுள்ளது.நீலகிரி மாவட்ட நுகர்வோர் குழுக்களின் கூட்டமைப்பு சாதாரண பொதுக்குழு கூட்டம் நடந்தது.கூட்டத்திற்கு தலைவர் கிருஷ்ணசாமி தலைமை வகித்தார். பொது செயலாளர் வீரபாண்டியன் ஆண்டறிக்கை வாசித்தார். பொருளாளர் வனிதாகுமாரி வரவு செலவு கணக்கை சமர்ப்பித்தார். சாந்தி, விஜயகுமார் ஆகியோர் புதிதாக தேர்வு செய்யப்பட்டனர். பின்பு,'பாக்கெட் உணவுகள் அனைத்தையும் பரிசோதனை செய்ய வேண்டும்; தனியார் பள்ளிகளில்

கட்டணங்களை முறைப்படுத்த வேண்டும்; பல ஆண்டுகளாக, பணிமாற்றம் செய்யப்படாத ரேஷன் ஊழியர்களை மாற்ற வேண்டும்; ரேஷன் கடைகளுக்கு, 10 சதவீதமாக குறைக்கப்பட்ட சர்க்கரை அளவை முழுமையாக வழங்க வேண்டும்; மரபணு மாற்று விதைகளை, தமிழகத்தில் பயன்படுத்த தடை விதிக்க வேண்டும்' என்பன உட்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. கூட்டத்தில், துணைத் தலைவர் சிவசுப்ரமணியம், செல்வராஜ் உட்பட பலர் பங்கேற்றனர்.

**தேங்காய் பருப்பு விலை உயர்வு**

வேலாயுதம்பாளையம்: வேலாயுதம்பாளையம் அருகே திருக்காடுதுறை, கொங்குநகர், வடிவேல் நகர், புகழூர், தோட்டகுறிச்சி, கடம்பங்குறிச்சி குளத்துப்பாளையம், வேட்டமங்கலம், குந்தானிப்பாளையம், ஓரம்புப்பாளையம், ஓலப்பாளையம், நல்லிக்கோவில், கவுண்டன்புதூர், உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில், ஆயிரக்கணக்கான ஏக்கரில் தென்னை பயிரிடப்பட்டுள்ளது.

தேங்காய் பருப்பு கேரளா, ஆந்திரா, கர்நாடகா, உத்திரபிரதேசம் உள்ளிட்ட பல்வேறு வெளி மாநிலங்களுக்கு அனுப்பி வைக்கின்றனர். சில வியாபாரிகள் தேங்காய் பருப்புகளை, ஈரோடு மாவட்டம், சாலைப்புதூரில் வேளாண்மை விற்பனை மையத்தில் விற்பனை செய்கின்றனர்.

கடந்த வாரம், 100 கிலோ கொண்ட தேங்காய் பருப்பு, 6,300 ரூபாய்க்கு விற்பனையானது. நடப்பு வாரம், 100 கிலோ கொண்ட தேங்காய் பருப்பு, 7,000 ரூபாய் முதல், 7, 500 ரூபாய் வரை விற்பனையானது. கடந்த வாரங்களில் ஒரு தேங்காய், 12 ரூபாய்க்கு விற்ற தேங்காய், இந்த வாரத்தில், 15 ரூபாய் வரை விற்பனையானது. தேங்காய் பருப்பு உற்பத்தி குறைவால், விலை அதிகரித்துள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

**விவசாய உற்பத்தியாளர்கள் நிறுவனத்தின் சேவை பயன்பெற மாவட்ட கலெக்டர் அழைப்பு**

கரூர்" விவசாய உற்பத்தியாளர்கள் நிறுவனம் மூலம், விவசாயிகளுக்கு வழங்கப்படும் சேவைகளை, மாவட்ட கலெக்டர் ஜெயந்தி பார்வையிட்டார்.

அதன் பின், அவர் கூறியதாவது: விவசாயிகளுக்கு தேவையான வேளாண் இடுபொருட்கள் மற்றும் தரமான விதைகள், உபகரணங்கள், மருந்து வகைகளுக்கு விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. சரியான கால கட்டங்களில் கிடைக்கும் வகையில், நபார்டு வங்கியின் மூலம் நிதியுதவி வழங்கப்பட்டு, கரூர் மாவட்டத்தில், நச்சலூர் மற்றும் நடையனூர் விவசாயிகள் மூலம் நிறுவனம் அமைக்கப்பட்டு, தற்போது செயல்பட்டு வருகிறது. விவசாய இடு பொருட்களை, நேரடியாக விவசாயிகள் பெற்று, அதன் மூலம் உற்பத்தியாகும் வேளாண் பொருட்களை நல்ல விலைக்கு விற்பனை செய்வதே இதன் நோக்கம். அதன் அடிப்படையில், 150 விவசாயிகள் ஒருங்கிணைந்து, முன்னோடி விவசாயி கரிகாலன் தலைமையில், நச்சலூர் விவசாயிகள் உற்பத்தியாளர் நிறுவனத்தை செயல்படுத்தி வருகின்றனர். இப்பகுதியில், 5,000 ஏக்கர் பரப்பளவில், விவசாய பணிகள் ஆண்டுதோறும் நடந்து வருகிறது. புதிதாக அமைக்கப்பட்ட பார்மர்ஸ் புரொடியூசர்ஸ் கம்பெனி மூலம் இப்பகுதி விவசாயிகளுக்கு நெல், தானிய விதைகள், உர வகைகள், பூச்சி மருந்துகள் அரசு நிர்ணயிக்கப்பட்ட விலையில் குறித்த நேரத்தில் வழங்கப்படுகிறது.

தனியாரிடம் அதிக விலை கொடுத்தும், குறித்த நேரத்தில் இடு பொருட்கள் கிடைக்காமல் சிரமப்பட்டு வந்த விவசாயிகளுக்கு, இந்நிறுவனத்தின் மூலம் செம்மை நெல் சாகுபடிக்குத் தேவையான தொழில் நுட்ப வசதிகள், வேளாண் வணிக வசதிகள், பயிர்பாதுகாப்பு போன்ற சேவைகள் வழங்கப்பட்டு வருகிறது.

இதுவரை, ஐந்து கோடி ரூபாய்க்கு, இடு பொருட்கள் மற்றும் உர வகைகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. நபார்டு வங்கி நிதியுதவியுடன், தானியங்கள் சுத்தம் செய்யும் இயந்திரங்கள் பொருத்தப்பட்டுள்ளது. இதுவரை இங்கு வந்த குஜராத், கேரளா, கர்நாடகா மாநிலத்தைச் சேர்ந்த முன்னோடி விவசாயிகள் விதை நெல், மற்றும் தானிய வகைகள் என, 3,000 டன் அளவுக்கு சுத்தம் செய்து எடுத்துச் சென்றுள்ளனர். வேளாண் பொறியியல் துறையில், 15 லட்சம் மதிப்பில் வேளாண் உபகரணங்கள் பெற்று, மிகக்குறைந்த வாடகைக்கு விவசாயிகள் பயன்படுத்தி வருகின்றனர். வேலாயுதம்பாளையம், நடைனூரில் தென்னை விவசாயிகள், 500 பேர் இணைந்து, நடையனூர் விவசாய உற்பத்தியாளர் நிறுவனம் அமைத்து செயல்பட்டு வருகின்றனர். இதன் மூலம், அப்பகுதியில், 3,000 விவசாயிகளுக்கு இடுபொருட்கள், ரசாயனம், நாட்டுச்சர்க்கரை, மரவள்ளிக்கிழங்கில் மாவுச்சத்து கண்டறியும் சேவை, கால்டை தீவன உற்பத்தி போன்ற சேவைகள் வழங்கப்படுகிறது.

இதேபோல், மற்ற பகுதி விசாயிகளும் ஒருங்கிணைந்து, உற்பத்தி பொருட்களை விற்பனை செய்து பயன்பெற வேண்டும். இவ்வாறு கலெக்டர் ஜெயந்தி கூறினார். நிகழ்ச்சியில் நபார்டு வங்கி மேலாளர் பார்த்திபன், வேளாண் துறை மற்றும் வேளாண் அறிவியல் மைய அலுவலர் திரவியம் மற்றும் அரசு அலுவலர்கள் பங்கேற்றனர்.

## வாழையில் இலைப்புள்ளி கட்டுப்படுத்த ஆலோசனை

தேனி : தேனி, பெரியகுளம் தாலுகாக்களில் சீலையம்பட்டி, கோட்டூர், உப்பார்பட்டி, வீரபாண்டி, அன்னஞ்சி, வடபுதுப்பட்டி பகுதிகளில் பயிரிடப்பட்டுள்ள வாழையில் இலைப்புள்ளி நோய் (காஞ்சாரை) அதிகளவில் காணப்படுகிறது.

இதை கட்டுப்படுத்தும் வழிமுறைகள் குறித்து தேனி தோட்டக்கலை உதவி இயக்குனர் ராஜன் கூறியதாவது: இது ஒரு பூஞ்சாண நோய். இந்நோய் தாக்கிய இலைகளில் முதலில் மஞ்சள் நிறப்புள்ளிகள் தோன்றும். பின் அவை பழுப்பு நிறக் கோடுகளாக மாறி நடுவில் சாம்பல் நிறமாக இருக்கும். பாதிக்கப்பட்ட இலைகள் நுனியில் இருந்து கருக ஆரம்பித்து, இலை முழுவதும் விரைவில் காய்ந்துவிடும். காய்களில் வளர்ச்சி பாதிக்கப்பட்டு பிஞ்சிலேயே காய் பழுத்து வீணாகிவிடும். பகலில் வெப்பமும், இரவில் குளிர்ச்சியும், காற்றில் ஈரப்பதம் அதிகமாக இருக்கும் பொழுது இந்நோய் தீவிரமாக பரவுகிறது. இது காற்றின் மூலம் பரவும் நோய்.கட்டுப்படுத்தும் முறை: நோய் தாக்கப்பட்ட காய்ந்த இலைகளை வெட்டி அப்புறப்படுத்தி தீயிட்டு அழிக்க வேண்டும். நோய் தாக்கப்பட்ட தோட்டத்தில் தண்ணீர் தேங்காமல் பார்த்து கொள்ள வேண்டும். இந்நோயின் ஆரம்ப அறிகுறிகள் தென்பட்டவுடன் கார்பென்டாசியம் 2 கிராம் அல்லது மேங்கோசெப் 2.5 கிராம் மருந்தை ஒரு லிட்டர் தண்ணீருடன் ஓட்டும் திரவம் கலந்து தெளிக்க வேண்டும். அல்லது பிராபிகானோசோல் 1.5 மில்லி உடன் பெட்ரோலிய எண்ணெய் (பனோல் ஆயில்) 10 மில்லியை ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து இலைகளின் மேல் தெளித்து கட்டுப்படுத்தலாம், என்றார்.

## குறுவை நெல் சாகுபடி பணிகள் மும்முரம்

சின்னமனூர் : சின்னமனூர் பகுதியில் முதல் போக குறுவை நெல் நாற்று நடவு மும்முரமாக நடக்கிறது. தேவையற்ற யூரியா பயன்படுத்துவதை தவிர்க்க விவசாயத்துறை ஆலோசனை வழங்கியுள்ளனர்.

சின்னமனூர் பகுதியில் 1460 எக்டேர் பரப்பில் குறுவை சாகுபடி நடக்கிறது. மார்க்கையன்கோட்டை, குச்சனூர் பகுதியில் நாற்று நடவு பணி மும்முரமாக நடக்கிறது. திருந்திய நெல் சாகுபடி முறையில் எக்டேருக்கு 10 டன்னிற்கு குறைவில்லாமல் மகசூல் கிடைப்பதால்,

விவசாயிகள் இம்முறையில் நடவு பணியை மேற்கொள்கின்றனர். விவசாயத்துறையினர் கூறுகையில், "மேட்டுப்பாத்தி முறையில் நாற்றங்கால் அமைத்து, 12 முதல் 15 நாட்களான நாற்றுகளை நடவு செய்தால் கூடுதல் மகசூல் கிடைக்கும். திருந்திய நெல் சாகுபடியில் "கோனோவீடா' களையெடுப்பு இயந்திரம் பயன் படுத்துவதால், களைகளை மடித்து உரமாக பயன்படுகிறது. விவசாயிகள் இலை வண்ண அட்டையை பயன்படுத்தி தேவையான யூரியா இடவேண்டும். தேவையற்ற யூரியாவை பயன் படுத்துவதால் உற்பத்தி செலவு அதிகரிக்கும்,' என்றனர்.

தினத் தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

**அன்னங்கோவில் மீன் ஏலம் விடும் தளத்திற்கு 200 டன் மத்தி மீன்கள் வரத்து**




பரங்கிப்பேட்டை,

அன்னங்கோவில் ஏலம் விடும் தளத்திற்கு நேற்று 200 டன் மத்தி மீன்கள்

வந்தன. மத்தி மீன்கள்
சிதம்பரம் அருகே பரங்கிப்பேட்டை, அன்னங்கோவில், பின்னூர், புதுப்பேட்டை, புதுக்குப்பம், மடவாபள்ளம், முடசல் ஓடை உள்பட 50-க்கும் மேற்பட்ட கிராமத்தை சேர்ந்த மீனவர்கள் நேற்று முன்தினம் விசை மற்றும் பைபர் படகுகளில் ஆழ்கடலுக்கு சென்று மீன் பிடித்தனர். இதில் 200 டன் மத்தி மீன்கள் சிக்கின இதை அன்னங்கோவில் மீன் ஏலம் விடும் தளத்திற்கு அவர்கள் நேற்று கொண்டுவந்தனர். இதையடுத்து கேரளா, கர்நாடகா மற்றும் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளை சேர்ந்த வியாபாரிகள் மீன்களை போட்டி போட்டுக்கொண்டு வாங்கி சென்றனர். இது குறித்து மீனவர் ஒருவர் கூறியதாவது:- மீன்பிடி தடை காலத்திற்கு பிறகு நாள் ஒன்றுக்கு எங்களது வலையில் சுமார் 50 முதல் 80 டன் வரைக்கும் மீன்கள் சிக்கி வந்தன. மீனவர்கள் மகிழ்ச்சி இந்த நிலையில் நேற்று முன்தினம் நாங்கள் எதிர்பாராத அளவிற்கு 200 டன் மத்தி மீன்கள் வலையில் சிக்கின. மேலும் ஒரு டன் மத்தி மீன்கள் ரூ.1 லட்சத்து 10 ஆயிரம் வரை விற்பனை ஆனது. இதனால் மீனவர்களான நாங்கள் அனைவரும் பெரும் மகிழ்ச்சி அடைந்துள்ளோம். மீன்கள் வரத்து அதிகரிப்பால் அன்னங்கோவில் மீன் ஏலம் விடும் தளம் தற்போது பரபரப்புடன் காணப்படுகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

**கடலூரில், 102 டிகிரி வெயில் கொளுத்தியது சாலைகளில் அனல் காற்று வீசியதால் வாகன ஓட்டிகள் கடும் அவதி**



கடலூரில் நேற்று 102 டிகிரி வெயில் கொளுத்தியது. முக்கிய சாலைகளில் அனல் காற்று வீசியதால் வாகன ஓட்டிகள் கடும் அவதி அடைந்தனர். அனல் காற்று

கோடை வெயில் முடிந்தும் கடலூரில் வெயில் வாட்டி வதைத்து வருகிறது. கடந்த சில நாட்களுக்கு முன்பு சூறைக்காற்றுடன் மழை பெய்தது. இதனால் பல ஏக்கர் பரப்பளவில் விவசாயிகள் பயிரிட்டிருந்த வாழைகள் முறிந்து சேதமடைந்தன. இருப்பினும் நீண்ட நாட்களாக வெயில் கொடுமையை அனுபவித்து வந்த மக்களுக்கு சமீபத்தில் பெய்த மழை சற்று ஆறுதலாக இருந்தது. இதைத்தொடர்ந்து மீண்டும் வெயில் சுட்டெரிக்க தொடங்கியது. இதனால் பொதுமக்கள் வீட்டை விட்டு வெளியே வர முடியாமலும், வீட்டுக்குள் இருக்க முடியாமலும் தவித்து வருகின்றனர். இரவு நேரங்களில் வீட்டில் மின்விசிறியில் இருந்து காற்று அனல் காற்றாக இருப்பதால் தூங்க முடியாமல் மக்கள் புலம்பி வருகின்றனர். 102.02 டிகிரி

குறிப்பாக கைக்குழந்தைகள், கர்ப்பிணி பெண்கள், முதியோர் பெரும் துயரத்துக்கு ஆளாகி வருகின்றனர். நேற்று காலை 7 மணிக்கே வெயில் சுட்டெரிக்க தொடங்கி விட்டது. நேரம் ஆக, ஆக வெப்பத்தின் அளவு அதிகரித்துக்கொண்டே சென்றது. இதனால் பகல் 12 மணிக்கு வெளியில் மக்கள் நடமாட முடியவில்லை. அந்த அளவுக்கு வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்தது. வெயிலின் தாக்கத்தால் காலையில் பள்ளிக்கு சென்ற போதும், மாலையில் வீடு திரும்பும் போதும் தங்கள் குழந்தைகளை பெற்றோர் குடை பிடித்தபடியும், கைக்குட்டை, சேலை முந்தானையால் மூடிய படியும் அழைத்துச்சென்றதை காண முடிந்தது. கடலூரில் நேற்று 102.02 டிகிரி (38.9 செல்சியஸ்) வெயில் கொளுத்தியால் முக்கிய சாலைகளில் அனல் காற்று வீசியது. இதனால் வாகன ஓட்டிகள் கடும் அவதி அடைந்தனர்.

தலைக்கவசம் அணிய வேண்டும் என்ற உத்தரவு இருந்தாலும், வெயிலின் கொடுமையில் இருந்து தப்பிப்பதற்காக பெரும்பாலான வாகன ஓட்டிகள் தலைக்கவசம் அணிந்தபடி சென்றதையும் காண முடிந்தது.

**நீலகிரியில் தொடர் மழை: அணைகளில் நீர்மட்டம் உயர்வு**



ஊட்டி,

நீலகிரி மாவட்டத்தில் பெய்யும் தொடர் மழையால் அணைகளில் நீர்மட்டம் வேகமாக உயர்ந்து வருகிறது. தென்மேற்கு பருவமழை

நீலகிரி மாவட்டத்தில் தென்மேற்கு பருவ மழை கடந்த சில நாட்களாக தீவிரமாக பெய்து வருகிறது. இந்த மழை காரணமாக மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் மரங்கள் விழுந்து போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது. மேலும் ஒரு சில இடங்களில் வீடுகளுக்குள் மழைநீர் புகுந்தது. இதனால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

மழையின் காரணமாக ஆறுகளில் வெள்ளப்பெருக்கும் ஏற்பட்டுள்ளது. இதனால் அணைகளுக்கு வரும் தண்ணீரின் அளவு அதிகரித்து உள்ளது. இதனால் மாவட்டத்தில் உள்ள அனைத்து அணைகளிலும் நீர்மட்டம் வேகமாக உயர்ந்து வருகிறது. <u>குடிநீர் அணைகள்</u>

ஊட்டி நகராட்சிக்கு குடிநீர் வழங்கும் அணைகளின் நீர்மட்டமும் மழையால் உயர்ந்து உள்ளது. தற்போது பார்சன்ஸ் வேலி அணையில் 28 அடி உயரத்திற்கும், டைகர் ஹில் அணையில் 25.5 அடி உயரத்திற்கும், மார்லிமந்து அணையில் 20 அடிக்கும், தொட்டபெட்டா அப்பர் அணையில் 10 அடிக்கும் தண்ணீர் உள்ளது. இதுதவிர தொட்டபெட்டா லோயர், கோடப்பமந்து அப்பர் உள்ளிட்ட அணைகளுக்கு வரும் தண்ணீரின் அளவு அதிகரித்து உள்ளது. நகராட்சிக்குட்பட்ட அணைகளில் டைகர்ஹில் மற்றும் தொட்டபெட்டா அப்பர் ஆகிய அணைகள் விரைவில் நிரம்பும் நிலையில் உள்ளது. இதன் காரணமாக இந்த ஆண்டு குடிநீர் பற்றாக்குறை ஏற்பட வாய்ப்பு இல்லை என்று நகராட்சி அதிகாரிகள் தெரிவித்து உள்ளனர்.

<u>மின்வாரிய அணைகள்</u>

மேலும் அணைகளில் தேக்கி வைக்கப்படும் தண்ணீரை கொண்டு சுமார் 750 மெகாவாட்டிற்கு மேல் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. கடந்த ஏப்ரல், மே மாதங்களில் மின்சாரம் உற்பத்தி செய்ய அணைகளில் இருந்து தண்ணீர் அதிகளவு எடுக்கப்பட்டது. இதன் காரணமாக முக்கிய அணைகளின் நீர்மட்டம் குறைந்து காணப்பட்டது. ஆனால் தற்போது பெய்து வரும் மழையினால் பைக்காரா, அவலாஞ்சி, அப்பர் பவானி உள்ளிட்ட மின்வாரிய அணைகளும் வேகமாக நிரம்பி வருகின்றன. இதன் காரணமாக இந்த ஆண்டு நீர்மின் உற்பத்தியில் எவ்வித பாதிப்பும் ஏற்படாது என்று மின்வாரிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

**தேவூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் ரூ.40 லட்சத்துக்கு எள் ஏலம்**



தேவூர் அருகே உள்ள சென்றாயனூர் தெற்கு தோட்டம், வட்ராம்பாளையம், பாலிருச்சம் பாளையம், கை கோளபாளையம், சோழக்கவுண்டானூர், காவேரிப்பட்டி சுற்றுவட்டார கிராமங்களில் விவசாயிகள் அதிகளவில் எள் சாகுபடி செய்து வருகின்றனர். இந்த பகுதிகளில் இருந்து விவசாயிகள் எள் மூட்டைகளை தேவூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்க வளாகத்திற்கு நேற்று ஏலத்திற்காக கொண்டு வந்தனர். இதில் கடந்த ஆண்டு கிலோ ஒன்றுக்கு ரூ.150–க்கு ஏலம் போன வெள்ளை எள், இந்த ஆண்டு ரூ.70 முதல் 81.70 வரை ஏலம் போனது. கடந்த ஆண்டு கிலோ ரூ.130–க்கு விற்பனை செய்யப்பட்ட சிவப்பு எள் இந்த ஆண்டு ரூ.65 முதல் 76.40 வரை விற்பனையானது. கடந்த ஆண்டு ரூ.140–க்கு விற்பனையான அட்டை கருப்பு எள் ரூ.64 முதல் 75.50 வரை விற்பனையானது. ஏலத்தில் மொத்தம் 750 மூட்டைகள் எள் கொண்டு வரப்பட்டு, ரூ.40 லட்சத்திற்கு ஏலம் போனது.

எள் விலை கடந்த ஆண்டை காட்டிலும் இந்த ஆண்டு பாதிக்கு பாதியாக குறைந்ததால் விவசாயிகள் கவலை அடைந்தனர். விலை குறைவால்

விவசாயிகள் சிலர் தாங்கள் கொண்டு வந்த எள் மூட்டைகளை திரும்ப எடுத்து சென்றனர்.

**தஞ்சை மாவட்டத்தில் இந்த ஆண்டு வங்கிகள் மூலம் ரூ.4,897 கோடி விவசாய கடன் கலெக்டர் சுப்பையன் தகவல்**



தஞ்சை மாவட்டத்தில் இந்த ஆண்டு வங்கிகள் மூலம் ரூ.4 ஆயிரத்து 897 கோடி விவசாய கடன் வழங்கப்பட்டுள்ளது என்று கலெக்டர் சுப்பையன் கூறினார். வங்கியாளர்கள் கூட்டம்

தஞ்சை மாவட்ட கலெக்டர் அலுவலக அரங்கில் வங்கியாளர்கள் கூட்டம் கலெக்டர் சுப்பையன் தலைமையில் நடந்தது. அப்போது அவர் பேசியதாவது:-

தமிழக முதல்-அமைச்சர் ஜெயலலிதா புதிதாக தொழில் தொடங்குவதற்கு பல்வேறு உதவிகளை வழங்கி வருகிறார். இது போன்ற திட்டங்களுக்கு வங்கிகள் முழு அளவில் ஆதரவு அளிக்க வேண்டும். குறிப்பாக தொழில் முனைவோருக்கு உடனடியாக கடனுதவி வழங்க வேண்டும். நலிவடைந்தவர்கள், சிறுபான்மையினர், பெண்கள், பிற்படுத்தப்பட்ட, ஆதிதிராவிட மற்றும் மலைசாதியினர் முன்னேற்றத்துக்கு வேண்டிய அனைத்து உதவிகளையும் வங்கிகள் வழங்க வேண்டும். தஞ்சை மாவட்டத்தில் உள்ள வங்கிகள் கடந்த 3 மாதங்களில் முந்தைய

மாதங்களை விட அதிக அளவில் நிதி வழங்கி பல்வேறு கடனுதவிகளை வழங்கி உள்ளது. இது தொடர வேண்டும். குறிப்பாக பயிர்க்கடன், கறவை மாடு கடன் உள்ளிட்ட கடனுதவிகள் வழங்கப்பட்டுள்ளன. கறவை மாட்டுக்கடன் இன்னும் சற்று கூடுதலாக வழங்க வேண்டும். மாவட்ட தொழில் மையம் மூலம் தொழில் தொடங்க வழங்கப்பட்ட விண்ணப்பங்களுக்கு ஜூலை 10-ந்தேதிக்குள் கடன் அனுமதி வழங்க வேண்டும். விவசாய கடன் வங்கிகள் மூலம் கடந்த ஆண்டில் விவசாய கடன் ரூ.4 ஆயிரத்து 893 கோடி வழங்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில் ரூ.4 ஆயிரத்து 897 கோடி வழங்கப்பட்டுள்ளது. ஆதிதிராவிட மற்றும் மலைசாதியினருக்கு கடந்த ஆண்டில் ரூ.263 கோடியும், நடப்பாண்டில் ரூ.267 கோடியும் வழங்கப்பட்டுள்ளது.

மகளிருக்கு கடந்த ஆண்டில் ரூ.ஆயிரத்து 299 கோடியும், நடப்பாண்டியில் ரூ. ஆயிரத்து 339 கோடியும், சிறுபான்மையின மக்களுக்கு கடந்த ஆண்டில் ரூ.621 கோடியும், நடப்பாண்டில் ரூ.707 கோடியும் வழங்கப்பட்டுள்ளது. நலிவடைந்தோருக்கு கடந்த ஆண்டில் ரூ.2 ஆயிரத்து 647 கோடியும், நடப்பாண்டில் ரூ.2 ஆயிரத்து 879 கோடியும் கடன் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

கூட்டத்தில் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி முதுநிலை மண்டல மேலாளர் சித்தார்த்தன், ரிசர்வ் வங்கி உதவி பொது மேலாளர் பாலு, நபார்டு வங்கி உதவி பொது மேலாளர் சுப்பிரமணியன், இந்தியன் ஓவர்சீஸ் வங்கி முதன்மை மேலாளர் கஜேந்திரநாதன், ஊரக வாழ்வாதார இயக்க திட்ட இயக்குனர் சிவக்குமார் மற்றும் வங்கியாளர்கள் கலந்து கொண்டனர்.

**தஞ்சையில் இருந்து கோவைக்கு 1,197 டன் புழுங்கல் அரிசி சரக்கு ரெயிலில் அனுப்பி வைக்கப்பட்டது**



தஞ்சையில் இருந்து கோவைக்கு 1,197 டன் அரிசி மூட்டைகள் சரக்கு ரெயிலில் அனுப்பி வைக்கப்பட்டன. நெற்களஞ்சியம் தமிழகத்தின் நெற்களஞ்சியமாக தஞ்சை மாவட்டம் விளங்கி வருகிறது. இங்கு குறுவை, சம்பா, தாளடி என 3 போகம் நெல் சாகுபடி நடைபெறும். இது தவிர கோடை நெல் சாகுபடியும் நடைபெறும். தஞ்சை மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் நெல் அரசால் கொள்முதல் செய்யப்பட்டு வருகின்றன. இதற்காக நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு கொள்முதல் செய்யப்படுகின்றன. இவ்வாறு கொள்முதல் செய்யப்படும் நெல், தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களுக்கு அரவைக்காக சரக்கு ரெயில் மற்றும் லாரிகள் மூலம் அனுப்பி வைக்கப்படும். மேலும் தஞ்சை மாவட்டத்தில் உள்ள நெல் சேமிப்பு கிடங்குகளிலும் இருப்பு வைக்கப்படும். மேலும் தஞ்சை மாவட்டத்தில் உள்ள அரிசி ஆலைகளுக்கும் அரவைக்காக அனுப்பி

வைக்கப்படும். 1,197 டன் புழுங்கல் அரிசி இவ்வாறு அனுப்பி வைக்கப்பட்ட நெல் அரவைக்கு பின்னர் பல்வேறு மாவட்டங்களுக்கு அரிசியாகவும் பொதுவினியோக திட்டத்தில் வினியோகம் செய்வதற்காக அனுப்பி வைக்கப்பட்டு வருகின்றன. அதன்படி நேற்று தஞ்சை மாவட்டத்தில் இருந்து கோவைக்கு சரக்கு ரெயில் மூலம் அரிசி மூட்டைகள் அனுப்பி வைக்கப்பட்டன. ஆலைகளில் இருந்து லாரிகளில் எடுத்துவரப்பட்டு ரெயிலில் ஏற்றப்பட்டு 1,197 டன் புழுங்கல் அரிசி அனுப்பி வைக்கப்பட்டது.

**சரக்கு ரெயிலில் 1,850 டன் நெல்மூட்டைகள் திருச்சி வந்தன**



தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் இருந்தும், வெளிமாநிலங்களில் இருந்தும் திருச்சிக்கு நெல், அரிசி, கோதுமை, உரம் போன்றவை சரக்கு ரெயிலில் வந்து இறங்குவது வழக்கம். இங்கிருந்து அவை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்படும். இந்த நிலையில் நாகப்பட்டிணம், சீர்காழியில் இருந்து சரக்கு ரெயிலில் 1,850 டன் நெல் மூட்டைகள் நேற்று திருச்சிக்கு வந்தது. சரக்கு ரெயிலில் மொத்தம் 42 வேகன்களில் திருச்சி குட்ஷெட் யார்டுக்கு கொண்டு வரப்பட்ட இந்த நெல்மூட்டைகளை தொழிலாளர்கள் வேகன்களில் இருந்து இறக்கி,

அவற்றை லாரிகளில் ஏற்றி திருச்சி மாவட்டத்தில் மண்ணச்சநல்லூர், இருங்களூர் உள்பட பல்வேறு பகுதிகளில் உள்ள அரசு குடோன்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

**நிபந்தனை இல்லாமல் கைத்தறி நெசவாளர்களுக்கு ரூ.2 லட்சம் கடன் வழங்க வேண்டும் சி.ஐ.டி.யு. கோரிக்கை**



நிபந்தனை இல்லாமல் கைத்தறி நெசவாளர்களுக்கு ரூ.2 லட்சம் கடன் வழங்க வேண்டும் என்று சி.ஐ.டி.யு. கோரிக்கை விடுத்துள்ளது.

<u>கைத்தறி நெசவாளர் சங்க கூட்டம்</u>

திருப்பூர் மாவட்ட சி.ஐ.டி.யு. கைத்தறி நெசவாளர் சங்கத்தின் நிர்வாகக்குழு கூட்டம் சங்க அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது. கூட்டத்துக்கு சங்க தலைவர் கனகராஜ் தலைமை தாங்கினார். இதில் சி.ஐ.டி.யு. சங்க தலைவர் உண்ணிகிருஷ்ணன், செயலாளர் சண்முகம் ஆகியோர் உள்பட நிர்வாகிகள், நிர்வாகக்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:–

திருப்பூர் மாவட்டத்தில் பல்லாயிரக்கணக்கான கைத்தறி நெசவாளர்கள் உள்ளனர். கைத்தறிக்காக சில ரகங்களை அரசு ஒதுக்கியிருந்தாலும்,

விதிமுறைக்கு புறம்பாக, விசைத்தறியில் கைத்தறி ரகங்களை நெசவு செய்வதும், அதை பற்றி புகார் தெரிவித்தால் புகார் தெரிவிப்போரை மிரட்டுவதும், தாக்குவதும் நடந்து வருகிறது. எனவே கைத்தறி துணி நூல் அமலாக்க துறை ரக ஒதுக்கீட்டை விசைத்தறியில் நெசவு செய்வதை தடுக்க உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

முற்றுகை போராட்டம்

கைத்தறி நெசவாளர்களுக்கான ஐ.சி.ஐ.சி.ஐ. காப்பீட்டு திட்டத்தில் அரசு சில மாறுதல்களை செய்து, ஸ்மார்ட் கார்டு கொடுத்து வருகிறது. இந்த திட்டத்தில் புதிதாக சேருவோருக்கு இதுவரை புதிய அட்டைகள் வழங்கப்படவில்லை. எனவே மாநில கைத்தறி துறை இதில் தனி கவனம் செலுத்தி காப்பீட்டு மருத்துவ அட்டை கிடைக்காதவர்களுக்கு அட்டை கிடைக்க செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். தவறினால் சி.ஐ.டி.யு. கைத்தறி நெசவாளர் சங்கம் ஆர்ப்பாட்டம் நடத்தும்.

திருப்பூர் மாவட்டத்தில் நெசவாளர் கடன் அட்டை திட்டத்தில் சில வங்கிகள் ரூ.50 ஆயிரம் வரை மட்டுமே கடன் கொடுத்துள்ளனர். சில வங்கி நிர்வாகங்கள் கடன் தர முடியாது என்று மறுப்பதுடன், பல்வேறு நிபந்தனைகளை விதிக்கிறது. இந்த பிரச்சினையில் கலெக்டர் ஆய்வு செய்து கைத்தறி நெசவாளர்களுக்கு எந்தவித நிபந்தனையும் இல்லாமல் ரூ.2 லட்சம் வரை கடன் வழங்க ஆவன செய்ய வேண்டும். இதில் நடவடிக்கை எடுக்க தவறினால் முற்றுகை போராட்டம் நடத்துவது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தினகரன்

# உரங்களின் இருப்பு நிலவரத்தை ஆன்லைனில் தெரிந்து கொள்ளலாம்: வேளாண்துறை புதிய முயற்சி



பழநி: உரக்கடைகளில் உரங்களின் இருப்பு நிலவரத்தை இனி ஆன்லைனில் தெரிந்து கொள்ளும் வகையில் வேளாண்துறை புதிய முயற்சியில் ஈடுபட்டுள்ளது. பழநி மற்றும் அதன் சுற்றுப்புற கிராமங்கள் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டவை. இப்பகுதியில் உள்ள விவசாயிகள், தங்களுக்கு தேவையான நேரடி உரங்களான யூரியா, சல்பர், பொட்டாஷ், 20/20, 17/17 போன்றவைகளை உரக்கடைகள் மூலம் பெற்று வந்தனர். ஆனால், சில உரக்கடைக்காரர்கள் இந்த உரங்களை இருப்பு வைத்துக் கொண்டு, விலையை உயர்த்தி விற்பனை செய்து வந்தனர். இதனால் விவசாயிகள் கூடுதல் விலை கொடுத்து உரங்களை பெற்று வந்தனர். இதனைத் தவிர்க்கும் வகையில் தற்போது உரக்கடைகளில் உள்ள உரங்களின் இருப்பு நிலவரத்தை அனைவரும் தெரிந்து கொள்ளும் வகையில் ஆன்லைன் வசதி செய்யப்பட உள்ளது. இதன்படி ஒவ்வொரு பிரதி வெள்ளிக்கிழமையும், உரக்கடைக்காரர்கள் தங்களது கடையில் உள்ள உரங்களின் இருப்பு நிலவரத்தை அப்டேட் செய்ய வேண்டும். பின், அரசிடமிருந்து உரங்கள் பெறப்படும் தேதி,

விநியோகிக்கும் அளவு குறித்தும் அப்டேட் செய்ய வேண் டும். இது தொடர்பாக இன்று (வெள்ளி) பழநி பகுதியில் உள்ள 36 உரக்கடை களின் உரிமையாளர்களை அழைத்து ஆலோசனை நடத்தப்பட உள்ளதாக வேளாண்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

**உணவுப் பொருட்களில் தொடரும் அபாயம் பார்லே பிஸ்கட்டில் இரும்பு துகள்கள்**




சேலம்: நெஸ்லே நிறுவனத்தின் மேகிநூடுல்ஸ் தயாரிப்புகளுக்கு தடை விதிக்கப்பட்டதன் எதிரொலியாக பால், பாக்கெட் குடிநீர், பிஸ்கட், டீத்தூள், பஜ்ஜிமாவு, மசாலா ெபாருட்கள், பருப்பு, ஜவ்வரிசி, வெல்லம், குளிர்பானங்கள், எண்ணெய் போன்ற பல்வேறு பொருட்களின் மாதிரிகளை சேகரித்து உணவு பாதுகாப்பு துறை அதிகாரிகள் ஆய்வுக்கு அனுப்பி உள்ளனர். இந்நிலையில் பார்லே நிறுவனத்தின் தயாரிப்பான குழந்தைகள் விரும்பி சாப்பிடும் ‘ஹைடு அண்டு சீக்’ பிஸ்கட் பாக்கெட்டுக்குள் இரும்புத்துகள்கள் இருந்தது வாடிக்கையாளர் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.
சேலம் கருங்கல்பட்டியை சேர்ந்தவர் சிவசண்முகம் (35). தனியார் நிறுவன ஊழியர். மார்கெட் பகுதியில் உள்ள ஒரு பேக்கரியில் இருந்து 5 பிஸ்கட் பாக்கெட்டுகளை உறவினர்கள் வாங்கி வந்துள்ளனர். இதில்

பார்லே நிறுவனத்தின் ‘ஹைடு அண்டு சீக்’ பிஸ்கட் பாக்கெட்டும் ஒன்று.

ேநற்று காலை அந்த பிஸ்கட் பாக்ெகட்டை தனது 3வயது குழந்தைக்கு கொடுப்பதற்காக சிவசண்முகம் பிரித்துள்ளார். அதில் இருந்த பிஸ்கட்டுகளில் இரும்புத்துகள்கள் ஒட்டியிருப்பதை கண்டு அதிர்ச்சியடைந்தார்.

இதையடுத்து உறவினர் கூறிய சம்மந்தப்பட்ட கடைக்கு சென்று விளக்கம் ேகட்டுள்ளார். கடை ஊழியர்கள் இங்கு வாங்கியதற்கான பில் ஏதாவது உள்ளதா?, வாங்கியவரை வரச் சொல்லுங்கள் என்றெல்லாம் கேட்டதால் விரக்தியடைந்த சிவசண்முகம், இது குறித்து உணவு பாதுகாப்புத்துறை அதிகாரிகளிடம் புகார் ெதரிவிக்க முடிவு ெசய்துள்ளார். இதுகுறித்து சிவசண்முகம் கூறியதாவது: பார்லே நிறுவனத்தின் ‘ஹைடு அண்டு சீக்’ பிஸ்கெட் சாக்லெட் வாசம் வீசும். விலை ரூ.25. இதில் 20 பிஸ்கட்டுகள் இருக்கும். இந்த பிஸ்கட் பாக்கெட் குழந்தைகளுக்கு மிகவும் பிடிப்பதால் தொடர்ச்சியாக அதை வாங்கிக் கொடுத்து வருகிறோம். கடந்த ஞாயிற்றுக்கிழமை சென்னையில் இருந்து சேலம் வந்த உறவினர்கள், கருங்கல்பட்டி காய்மார்க்கெட் பகுதியில் உள்ள பேக்கரியில் இந்த பிஸ்கட் பாக்கெட்டை (பிகேசி 18-5-15 பேட்ஜ், 138ஏ3) வாங்கியுள்ளார். இந்த பிஸ்கட் பாக்கெட்டுக்குள் எப்படி இரும்பு துகள்கள் வந்தது என்று தெரியவில்லை. பொதுநலன் கருதி இது குறித்து உணவு பாதுகாப்பு துறை அதிகாரிகளிடம் புகார் செய்ய உள்ளேன் என்றார்.

**தமிழக காய்கறிகளுக்கு கேரள அரசு தடையா?**




சென்னை: கேரள அமைச்சர் எஸ்.ஐ.பி.யு. சிபுபேபிஜான் திருவனந்தபுரத்தில் இருந்து விமானம் மூலம் நேற்று மதியம் சென்னை வந்தார். விமான நிலையத்தில் அவர், நிருபர்களுக்கு அளித்த பேட்டி.தமிழக காய்கறிகள் கேரளவுக்கு வருவதற்கு, கேரள மாநில அரசு தடை விதித்துள்ளதாக வெளியான செய்திகள் முற்றிலும் தவறானது. மேலும், தமிழக காய்கறிகளை ஆய்வு செய்ததில், நச்சுத்தன்மை எதுவும் இல்லை என்று தெரியவந்துள்ளது. இந்நிலையில் தமிழக காய்கறிகள் கேரளாவுக்குள் நுழைய தடைவிதிக்க வேண்டிய அவசியமே இல்லை. ஆனால், அவ்வாறு தடை விதிக்கப்பட்டுள்ளதாக சிலர், தவறான வதந்திகளை பரப்பி வருகின்றனர். இது சரியானது அல்ல.

கேரளமும், தமிழகமும் அண்டை மாநிலங்கள். நட்புறவுடன் கூடி, ஒற்றுமையாக இருந்து வருகின்றன. இரு மாநிலங்கள் இடையே ஓரிரு சிறுசிறு பிரச்னைகள் இருக்கலாம். அவை அனைத்தும் சுமுகமாக பேசி தீர்க்க கூடியவைதான். பேச்சுவார்த்தையில் முடியாதது எதுவும் இல்லை. இவ்வாறு அவர் கூறினார். மலைப்பகுதியில் தொடரும் பருவமழை பரம்பிக்குளம் அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 1550 கனஅடியாக

அதிகரிப்புபொள்ளாச்சி, : மேற்குதொடர்ச்சி மலையில் தொடரும் தென்மேற்கு பருவ மழையால், பரம்பிக்குளம் அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு **1550** கனஅடியாக அதிரித்துள்ளதாக பொதுப்பணித்துறையினர் தெரிவித்தனர். பொள்ளாச்சியை அடுத்த டாப்சிலிப் அருகே உள்ள பரம்பிக்குளம் அணையிலிருந்து திறக்கப்படும் தண்ணீர், சர்க்கார்பதியில் உள்ள நீர்மின் உற்பத்தி நிலையத்தில், மின்உற்பத்தி செய்யப்பட்டு, பின் காண்டூர் கால்வாய் வழியாக திருமூர்த்தி அணை மற்றும் ஆழியார் அணைக்கு செல்கிறது. இந்த ஆண்டில் ஜனவரி முதல் மார்ச் மாதம் வரை மழை இல்லாததால், பரம்பிக்குளம் அணைக்கு தண்ணீர்வரத்து குறைந்தது. பின் ஏப்ரல், மே மாதத்தில் கோடைமழை இருந்தும், அணைக்கு தண்ணீர்வரத்து எதிர்பார்த்த அளவு இல்லை. இதன்காரணமாக மொத்தம் **72**அடி கொள்ளவு கொண்ட அணையின் நீர்மட்டம் கடந்த மாதம் இறுதியில் **15**அடியாக காணப்பட்டது. வினாடிக்கு அதிகபட்சமாக **50**கனஅடி தண்ணீரே வந்து கொண்டிருந்தது. இந்நிலையில், கடந்த சில தினங்களாக மேற்கு தொடர்ச்சி மலைபகுதியில் பெய்துவரும் பருவமழையால், பரம்பிக்குளம் அணைக்கு நீர்வரத்து வழக்கத்தை விட அதிகரிக்க துவங்கியது. மேலும் பரம்பிக்குளம் அணைக்கு தண்ணீர் வரும் நீர் பிடிப்பு பகுதிகளிலும் மழை அதிரித்தது. இதனால், அணைக்கு நீர்வரத்து நாளுக்கு நாள் அதிகரித்துள்ளது. தற்போது வினாடிக்கு **1550** கன அடிவீதம் தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. அணையின் நீர்மட்டம் **16.50** அடியாக உயர்ந்துள்ளது. நேற்று காலை நிலவரப்படி பரம்பிக்குளம் அணைப்பகுதியில் **57**மீமீ அளவில் மழைப்பதிவாகியிருந்தது. மேற்கு தொடர்ச்சி மலைபகுதியில் தொடர்ந்து மழை பெய்வதால், பரம்பிக்குளம் அணைக்கு தண்ணீர்வரத்து அதிகரித்து வருவதால், காண்டூர் கால்வாய் பராமரிப்பு பணி ஆகஸ்ட் மாதத்துடன் நிறைவடைந்த பின்,

அணையிலிருந்து திருமூர்த்தி அணைக்கு, காண்டூர் கால்வாய் வழியாக தண்ணீர் திறப்பு மேற்கொள்ள ஏதுவாக இருக்கும் என்று பொதுப்பணித்துறையினர் தெரிவித்தனர்.

நேற்று காலை நிலவரப்படி மழையளவு வருமாறு: பரம்பிக்குளம் 57மிமீ, மேல்நீரார் 86மிமீ, கீழ்நீரார்93மிமீ, மாக்கினாம்பட்டி5மிமீ, காடாம்பாறை 15மிமீ, பெருவாரிபள்ளம்12மிமீ, தூணக்கடவு 7மிமீ, மணக்கடவு 3மிமீ, நெகமம் 10மிமீ என்ற அளவில் மழை பதிவாகியுள்ளது.

**சின்னமனூரில் முதல் போகம் நெல் நடவு துவங்கியது**

தேனி மாவட்டத்தில் டெங்கு காய்ச்சலுக்கு நிலவேம்பு கசாயம் தேவாரம், : தேனி மாவட்டத்தில் செயல்படும் சித்தமருத்துவ பிரிவுகளில் டெங்கு காய்ச்சலுக்கு வழங்கப்படும் நிலவேம்பு கசாயம் காய்ச்சுவதில் சிக்கல் எழுந்துள்ளது.தேனி மாவட்டத்தில் வீரபாண்டி, தேவதானப்பட்டி, ஓடைப்பட்டி, உத்தமபாளையம், கம்பம், போடி, கோம்பை, தேவாரம், சின்னமனூர் என மாவட்டத்தின் பல ஊர்களிலும் சித்தாமருத்துவ பிரிவு இயங்கி வருகிறது. இங்கு தினந்தோறும் இயற்கை மருந்துகளை வாங்கி நோய்களை தீர்த்திட நோயாளிகள் செல்கின்றனர். இன்று நோயாளிகளை பல வகைகளில் அச்சுறுத்தும் டெங்கு, சிக்குன்குனியா, வைரஸ்காய்ச்சல்களுக்கு அருமருந்தாக நிலவேம்பு கசாயம் வழங்கப்படுகிறது. அலோபதி மருத்துவத்திற்கு சவால்விடும் வகையில் இதனை தினந்தோறும் வாங்கி குடித்தால் காய்ச்சல் குணமாகும் சக்தி இதில் உள்ளது. இதற்காக தேனி மாவட்ட நிர்வாகம் அவ்வப்போது நிலவேம்பு கசாயத்தை தினந்தோறும் பொதுமக்களுக்கு வழங்கிட உத்தரவிட்டுள்ளது.

ஆனால் அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்களில் தினமும் நிலவேம்பு பொடியை போட்டு அதனை காயவைத்து கசாயமாக தயாரிப்பதில் பல சிக்கல்கள் எழுகின்றன. எலெக்ட்ரிக் ஸ்டவ்களால் பிரயோஜனம் இல்லை. காரணம் அடிக்கடி கரண்ட் கட் மற்றும்

கிராமங்களில் நிலவும் மின்பற்றாக்குறையால் எலக்ட்ரிக் ஸ்டவ்களில் காய்ச்சுவதில் பல பிரச்னைகள் எழுகின்றன.இதனால் கேஸ் கனெக்ஷன் என்பது மிகவும் அவசியம். அதிலும் மாவட்ட நிர்வாகம் சித்தா பிரிவுகளுக்கு தேவையான வசதிகளை செய்து கொடுத்தால் தினமும் நிலவேம்பு கசாயத்தை காய்ச்சி வரக்கூடிய காய்ச்சல் பாதிப்பு உள்ளானவர்களுக்கு கொடுத்து அதனை தடுப்பதற்கு வசதியாக இருக்கும். ஆனால் எந்த அரசு மருத்துவமனைகளிலும் கேஸ் கனெக்ஷன் வசதி இல்லை. இதனால் சித்தா பிரிவில் பணியாற்றும் டாக்டர்கள் ஏனோதானோ என பணியாற்றும் நிலைமை உள்ளது.

பெயரளவில் நிலவேம்பு கசாயத்தை காய்ச்சி மக்களுக்கு கொடுத்துவிட்டு ஒதுங்கி கொள்கின்றனர். பல ஆரம்ப சுகாதார நிலையங்களில் நிலவேம்பு கசாயத்தை காய்ச்சுவதே இல்லை. எனவே உடனடியாக இலவசமாக அனைத்து சித்தா பிரிவுகளுக்கும் கேஸ் கனெக்ஷன் வழங்கிட மாவட்ட சித்தாபிரிவு நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை எழுந்துள்ளது.

**ஊட்டி தாவரவியல் பூங்காவில் 2ம் சீசன் விதைப்பு பணி துவக்கம்**

ஊட்டி, : ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் இரண்டாம் சீசனுக்கான விதைப்பு பணிகள் துவக்கப்பட்டுள்ள நிலையில், நாற்றுகள் தயாரானவுடன் வளர்ச்சி காலம் பொறுத்து நடவு பணிகளை துவக்க தோட்டக்கலைத்துறை முடிவு செய்துள்ளது. நீலகிரி மாவட்டம் வரும் சுற்றுலா பயணிகளை மகிழ்விக்கும் பொருட்டு ஆண்டு தோறும் கோடை சீசன் போது ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் மலர் கண்காட்சியும், ரோஜா பூங்காவில் ரோஜா கண்காட்சியும், குன்னூர் சிம்ஸ் பூங்காவில் பழக்கண்காட்சியும், கோத்தகிரியில் காய்கறி கண்காட்சி மற்றும் கூடலூரில் வாசனை திரவிய கண்காட்சி ஆகியவைகள் நடத்தப்படுகின்றனர். பெரும்பாலான சுற்றுலா பயணிகள் கோடையில்

நடக்கும் மலர் கண்காட்சியை காணவே வருகின்றனர். மலர் கண்காட்சியை காண வரும் சுற்றுலா பயணிகள் கண்களை கவரும் வகையில், தோட்டக்கலைத்துறை பல வகையான பல லட்சம் மலர் செடிகளை நடவு செய்வது வழக்கம். பூங்கா முழுவதிலும் பல்வேறு வண்ணங்களில் பூத்துக் குலுங்கும் மலர்களை கண்டு சுற்றுலா பயணிகள் ரசித்து செல்வது வழக்கம்.

ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் முதல் சீசன் முடிந்தவுடன் சுற்றுலா பயணிகள் வருகை குறைந்துவிடும். அதன்பின், இரண்டாம் சீசனான செப்டம்பர் மற்றும் அக்டோபர் ஆகிய மாதங்களில் சுற்றுலா பயணிகள் அதிகம் வருவார்கள். இரண்டாம் சீசனின் போது மலர் கண்காட்சி நடத்தாவிடிலும், தாவரவியல் பூங்காவில் புதிதாக மலர் செடிகள் நடவு செய்யப்பட்டு பூங்கா முழுவதிலும் பல லட்சம் செடிகளில் மலர்கள் பூத்துக் குலுங்கும். இதனை கண்டு சுற்றுலா பயணிகள் ரசித்து செல்வது வழக்கம். பொதுவாக மலர் கண்காட்சி முடிந்தவுடனேயே மலர் செடிகளின் வளர்ச்சி காலத்திற்கு ஏற்ப, அவைகளின் விதைகள் சேகரிக்கப்பட்டு, நர்சரிகளில் நாற்றுகள் தயார் செய்யும் பணிகள் துவக்கப்படும். தொடர்ந்து ஜூன் மாதம் முடியும் வரை விதை சேகரிக்கும் பணிகள் நடக்கும், அதே சமயத்தில் விதைப்பு பணிகளும் துவங்கும்.

இம்மாதம் துவக்கம் முதலே விதை சேகரிக்கும் பணிகள் துவங்கியது. பூங்காவில் உள்ள பாத்திகள் சீரமைக்கும் பணிகளும் துவங்கியுள்ளது. ஆனால், மழை இடையில் குறுக்கிட்டுள்ளதால் விதை சேகரிக்கும் பணியில் தொய்வு ஏற்பட்டுள்ளது. இந்நிலையில், ஏற்கனவே சேகரிக்கப்பட்ட விதைகளை கொண்டு இரண்டாம் சீசனுக்கான விதைப்பு பணிகளை பூங்கா நிர்வாகம் மேற்க்கொண்டு வருகிறது. நாற்றுகள் தயாரானுவுடன் வளர்ச்சி காலத்தை பொறுத்து நடவு பணிகளும் துவக்கப்படும் என தோட்டக்கலைத்துைற அதிகாரிகள் தெரிவித்தனர். - ஊட்டி, : ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் இரண்டாம் சீசனுக்கான விதைப்பு பணிகள் துவக்கப்பட்டுள்ள நிலையில், நாற்றுகள்

தயாரானவுடன் வளர்ச்சி காலம் பொறுத்து நடவு பணிகளை துவக்க தோட்டக்கலைத்துறை முடிவு செய்துள்ளது. நீலகிரி மாவட்டம் வரும் சுற்றுலா பயணிகளை மகிழ்விக்கும் பொருட்டு ஆண்டு தோறும் கோடை சீசன் போது ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் மலர் கண்காட்சியும், ரோஜா பூங்காவில் ரோஜா கண்காட்சியும், குன்னூர் சிம்ஸ் பூங்காவில் பழக்கண்காட்சியும், கோத்தகிரியில் காய்கறி கண்காட்சி மற்றும் கூடலூரில் வாசனை திரவிய கண்காட்சி ஆகியவைகள் நடத்தப்படுகின்றனர். பெரும்பாலான சுற்றுலா பயணிகள் கோடையில் நடக்கும் மலர் கண்காட்சியை காணவே வருகின்றனர். மலர் கண்காட்சியை காண வரும் சுற்றுலா பயணிகள் கண்களை கவரும் வகையில், தோட்டக்கலைத்துறை பல வகையான பல லட்சம் மலர் செடிகளை நடவு செய்வது வழக்கம். பூங்கா முழுவதிலும் பல்வேறு வண்ணங்களில் பூத்துக் குலுங்கும் மலர்களை கண்டு சுற்றுலா பயணிகள் ரசித்து செல்வது வழக்கம்.

ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் முதல் சீசன் முடிந்தவுடன் சுற்றுலா பயணிகள் வருகை குறைந்துவிடும். அதன்பின், இரண்டாம் சீசனான செப்டம்பர் மற்றும் அக்டோபர் ஆகிய மாதங்களில் சுற்றுலா பயணிகள் அதிகம் வருவார்கள். இரண்டாம் சீசனின் போது மலர் கண்காட்சி நடத்தாவிடிலும், தாவரவியல் பூங்காவில் புதிதாக மலர் செடிகள் நடவு செய்யப்பட்டு பூங்கா முழுவதிலும் பல லட்சம் செடிகளில் மலர்கள் பூத்துக் குலுங்கும். இதனை கண்டு சுற்றுலா பயணிகள் ரசித்து செல்வது வழக்கம். பொதுவாக மலர் கண்காட்சி முடிந்தவுடனேயே மலர் செடிகளின் வளர்ச்சி காலத்திற்கு ஏற்ப, அவைகளின் விதைகள் சேகரிக்கப்பட்டு, நர்சரிகளில் நாற்றுகள் தயார் செய்யும் பணிகள் துவக்கப்படும். தொடர்ந்து ஜூன் மாதம் முடியும் வரை விதை சேகரிக்கும் பணிகள் நடக்கும், அதே சமயத்தில் விதைப்பு பணிகளும் துவங்கும். இம்மாதம் துவக்கம் முதலே விதை சேகரிக்கும் பணிகள் துவங்கியது. பூங்காவில் உள்ள பாத்திகள் சீரமைக்கும் பணிகளும் துவங்கியுள்ளது.

ஆனால், மழை இடையில் குறுக்கிட்டுள்ளதால் விதை சேகரிக்கும் பணியில் தொய்வு ஏற்பட்டுள்ளது. இந்நிலையில், ஏற்கனவே சேகரிக்கப்பட்ட விதைகளை கொண்டு இரண்டாம் சீசனுக்கான விதைப்பு பணிகளை பூங்கா நிர்வாகம் மேற்க்கொண்டு வருகிறது. நாற்றுகள் தயாரானுவுடன் வளர்ச்சி காலத்தை பொறுத்து நடவு பணிகளும் துவக்கப்படும் என தோட்டக்கலைத்துை◌ற அதிகாரிகள் தெரிவித்தனர். -

ஊட்டி, : ஊட்டியில் மீண்டும் நேற்று முதல் மழை பெய்யத் துவங்கியுள்ளதால், பொதுமக்கள் அவதிக்குள்ளாகியுள்ளனர். ஊட்டியில் கடந்த 7 சில நாட்களாக காற்றுடன் பெய்த மழையால் பெரும்பாலான இடங்களில் மரங்கள் விழுந்து, சாலை போக்குவரத்து பாதிக்கப்பட்டது. மின் கம்பங்கள் முறிந்து விழுந்ததில், மின் கம்பிகளும் சேதம் அடைந்தன. மாவட்டம் முழுவதும் 60க்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்தன. இதனால், இயல்பு வாழ்க்கை முற்றிலும் பாதிக்கப்பட்டது. இந்நிலையில், கடந்த 6 நாட்களாக பெய்து வந்த மழை நேற்று முன்தினம் சற்று ஓய்ந்தது. அவ்வப்போது வெயிலும் தலைக் காட்டியது. நேற்று காலை வரை காலநிலை சீராக இருந்தது. ஆனால், முற்பகல் 11 மணிக்கு மேல் மீண்டும் ஊட்டியில் மழை பெய்யத்துவங்கியது. காற்றுடன் கூடிய சாரல் மழை எந்நேரமும் பெய்யத்துவங்கியது. இதனால், குளிரும் அதிகரித்தது. பொதுமக்கள் தங்களது அத்தியாவிசய பணிகளை தொடர முடியாமல் கடும் அவதிக்குள்ளாகினர்.

பள்ளி செல்லும் சிறிய குழந்தைகள் குளிரால் கடும் அவதிப்பட்டன. மேலும், உடைந்து விழுந்த மின் கம்பங்களை சீரமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ள மின் வாரிய ஊழியர்கள் கடும் அவதிக்குள்ளாகினர். அதேபோல், சாலையோரங்களில் உள்ள மரங்களை அகற்றும் பணிகளில் ஈடுபட்டுள்ள நெடுஞ்சாலைத்துறை மற்றும் வனத்துறை ஊழியர்களும் அருகில் உள்ள மரங்கள் விழுந்துவிடுமோ என்ற அச்சத்திலேயே

பணியாற்ற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. நேற்று முன்தினம் நீலகிரியில் பெய்த மழையின் அளவு மிமீ.,ல்: கூடலூர் 91, குந்தா 4, கேத்தி 10, நடுவட்டம் 54, ஊட்டி 9, கல்லட்டி 6, கிளன்மார்கன் 25, அப்பர்பவானி 110, எமரால்டு 53, அவலாஞ்சி 122, தேவாலா 101. தொடர்ந்து கூடலூர், தேவாலா மற்றும் நடுவட்டம் போன்ற பகுதிகளில் கன மழை பெய்து வரும் நிலையில், பொதுமக்கள் பாதிப்பிற்குள்ளாகியுள்ளனர். தாழ்வான பகுதகிளில் மழை நீர் தேங்கி நிற்பதால், பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

**முருங்கை விலை உயர்வு**

ஊட்டி, : சமவெளிப் பகுதிகளில் விளையும், முருங்கை, கத்திரி, வெண்டை, பாகற்காய் உட்பல பல்வேறு காய்கறிகள் ஊட்டி கொண்டு வரப்பட்டு காய்கறி கடைகளில் விற்பனை செய்யப்படுகிறது. இதனால், சமவெளிப் பகுதிகளில் விளையும் காய்கறிகளுக்கு எப்போதுமே சற்று விலை கூடுதலாக இருக்கும். உழவர் சந்தையில் கூட வெளி மாவட்ட காய்கறிகளுக்கு விலை சற்று அதிகமாகவே காணப்படும். இந்நிலையில் கடந்த ஒரு மாதத்திற்கு முன் முருங்கை விலை சற்று குறைந்துக் காணப்பட்டது. சில இடங்களில் 10 காய்களை கொண்டு ஒரு கட்டு ரூ.20 முதல் 30 வரை மட்டுமே விற்பனை செய்யப்பட்டு வந்தது. ஆனால், தற்போது முருங்கை விலை படிப்படியாக உயர்ந்துள்ளது. காய் அல்லது கட்டு கணக்கில் விற்பனை செய்யப்பட்டு வந்த முருங்கை தற்போது கிலோ கணக்கில் விற்பனை செய்யப்படுகிறது. சாதாரணமாக ஒரு கிலோவிற்கு 10 காய்கள் கூட இருப்பதில்லை. ஆனால், ஒரு கிலோ முருங்கை தற்போது மார்க்கெட்டில் ரூ.150 முதல் 200 வரை விற்பனை செய்யப்படுகிறது. விலையை கேட்டு பொதுமக்கள் வாங்காமல் செல்வதால், வியாபாரிகளுக்கு நஷ்டம் ஏற்படுதால்,

பெரும்பாலான கடைகளில் முருங்கை விற்பனை செய்வதையும் தவிர்த்துவிட்டனர்.

**சம்பா சாகுபடிக்கு முன் பாசன வாய்க்கால்கள் தூர்வாரப்படுமா?**

சேதுபாவாசத்திரம், : சேதுபாவாசத்திரம் கடைமடை பகுதிகளில் உள்ள பாசன வாய்க்கால்களை சம்பா சாகுபடிக்கு முன் தூர்வார வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை வைத்துள்ளனர். தஞ்சை மாவட்டம் சேதுபாவாசத்திரம் கடைமடை பகுதிகளில் கடந்தாண்டு வாய்க்கால்கள் தூர் வாரப்படாததால் சம்பா சாகுபடிக்கு முழுமையாக தண்ணீர் கிடைக்கவில்லை. கடைமடை பகுதிகளில் கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக ஒரு போகம் சம்பா சாகுபடி மட்டுமே நடந்து வருகிறது.

கடந்தாண்டு போதுமான தண்ணீர் வராததால் குருவிக்கரம்பை, மருங்கப்பள்ளம், வீரியங்கோட்டை, மரக்காவலசை போன்ற பகுதிகள் வழியாக செல்லக்கூடிய 5ம் நம்பர், 6ம் நம்பர் வாய்க்கால்கள் தூர்வாரப்படாமல் முழுமையாக தூர்ந்துள்ளது. பாசன வாய்க்கால்களை தூர் வாராவிட்டால் மேட்டூர் அணை நிரம்பி திறக்கப்பட்டாலும் கடைமடை பகுதியில் உள்ள பாசன வாய்க்கால்கள் தற்போது உள்ள மோசமான நிலையில் கடைமடை பகுதிக்கு தண்ணீர் கிடைப்பது எட்டாகனியாக இருக்கும். சம்பா சாகுபடிக்கு முன் கடைமடை பகுதி பாசன வாய்க்கால்கள் தூர்வாரப்படுமா என்று விவசாயிகள் எதிர்பார்த்துள்ளனர்.

இதுகுறித்து தஞ்சை மாவட்ட திமுக விவசாய அணி துணை அமைப்பாளர் பொன்.பாலசுப்பிரமணியன் கூறும்போது, தஞ்சை மாவட்டத்தின் கடைக்கோடி பகுதி தான் சேதுபாவாசத்திரம் கடைமடை. முன்னாள் அமைச்சர் எஸ்.எஸ்.பழநிமாணிக்கத்தின் முயற்சியால் ரூ.200 கோடி செலவில் காவிரி படுகை தூர்வாரப்பட்டு கரைகள் அமைக்கப்பட்டன. இதனால் மேட்டூர் அணை திறந்தவுடன் தங்கு

தடையின்றி கடைமடை பகுதிக்கு தண்ணீர் வந்து சேரக்கூடிய சூழ்நிலையில் காவிரிப்படுகை இருக்கிறது. இருப்பினும் சேதுபாவாசத்திரம் கடைமடை பகுதியில் உள்ள புதுப்பட்டினம் வாய்க்கால் குருவிக்கரம்பை- மருங்கப்பள்ளம் வழியாகவும் பூக்கொல்லை- வீரியங்கோட்டை வழியாக செல்லக்கூடிய 5ம் நம்பர், 6ம் நம்பர் வாய்க்கால்கள் கடந்த 3 ஆண்டுகளுக்கு மேலாக தூர்வாரப்படாமல் வாய்க்கால்கள் இருக்கும் இடமே தெரியாத அளவுக்கு தூர்ந்து மூடிவிட்டது.

கடந்தாண்டு போதுமான தண்ணீர் கிடைக்காததால் சாகுபடி செய்ய முடியாமல் விவசாயிகள் சிரமத்துக்கு ஆளாகினர். மேட்டூர் அணை விரைவில் நிரம்பி திறக்கப்பட்டால் ஒருபோகம் சம்பா சாகுபடி செய்துவிடலாம் என்ற எண்ணத்தில் உள்ள கடைமடை விவசாயிகளுக்கு உடனடியாக பாசன வாய்க்கால்களை தூர்வார அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேபோல் ஏரிகள் நிரம்புவதற்கு பாசன வாய்க்கல்கள் மூலம் பாசனம் தரக்கூடிய வாய்க்கால்களும். ஏரி, குளங்களிலிருந்து விவசாயத்துக்கு பாசனம் தரக்கூடிய வாய்க்கால்களையும் 100 நாள் வேலை திட்டத்தின்கீழ் வாய்க்கால்களை வெட்ட ஊராட்சி தலைவர்களுக்கு உத்த ரவிட வேண்டும் என்றார்.

**45 ஆயிரம் ஏக்கர் பாசனத்துக்கு தாமதமின்றி தண்ணீர் திறக்க வேண்டும் திமுக மாவட்ட செயலாளர் வலியுறுத்தல்** மதுரை, :பெரியாறு அணை நீர்மட்டம் 121 அடி தாண்டி, மேலும் தண்ணீர் வருவதால் கள்ளந்திரி மதகு வரையிலான 45 ஆயிரம் ஏக்கர் பாசனத்துக்கு தாமதமின்றி தண்ணீர் திறக்க வேண்டும் என மதுரை வடக்கு மாவட்ட திமுக செயலாளர் மூர்த்தி வலியுறுத்தியுள்ளார். அவரது அறிக்கை வருமாறு: முல்லை பெரியாறு அணை இருபோக ஆயக்கட்டு பேரணை முதல் கள்ளந்திரி மதகு வரை 45 ஆயிரம் ஏக்கர் உள்ளது. இதன் முதல் போகத்திற்கு ஜூன் முதல் வாரம் தண்ணீர்

திறப்பது வழக்கம். இதுவரை திறக்கப்படவில்லை. தண்ணீர் எப்போது கிடைக்கும் என விவசாயிகள் எதிர்பார்த்து காத்திருக்கின்றனர்.

தற்போது பெரியாறு அணை நீர்மட்டம் 121 அடியை தாண்டி தொடர்ந்து நீர்வரத்து உள்ளது. பெரியாறு, வைகை அணைகளில் நீர்இருப்பு மொத்தம் 4 ஆயிரம் மில்லியன் கன அடியை தாண்டி விட்டது. தொடர்ந்து மழை பெய்து அணைக்கு தண்ணீரும் வந்து கொண்டு இருக்கிறது. எனவே பெரியாறு அணை நீரை உடனடியாக வைகை அணைக்கு கொண்டு வந்து, பேரணை முதல் கள்ளந்திரி மதகு வரையிலான 45 ஆயிரம் ஏக்கர் பாசனத்துக்கு தண்ணீர் திறக்க வேண்டும். தாமதமின்றி திறப்பதின் மூலமே மதுரை மாவட்ட விவசாயிகள் பயிரிட்டு பயன்பெறுவதற்கு வாய்ப்பு ஏற்படும். பொதுப்பணித்துறையினர் கால்வாய்களிலுள்ள அடைப்புகளை அகற்றி, மதகுகளை சரிபார்த்து தண்ணீர் பாசனத்துக்கு சீராக கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கலெக்டரிடம் மனு:

பெரியாறு பாசனத் திட்டக்குழு தலைவர் முருகன், உறுப்பினர்கள் மன்னாடிமங்கலம் முருகன், அருள்பிரகாசம், பரந்தாமன், திருப்பதி, காரணன் ஆகியோர் நேற்று மதுரை கலெக்டர் சுப்பிரமணியத்திடம் கோரிக்கை மனு கொடுத்தனர். அதில்,“பெரியார் அணையில் நல்ல மழை பெய்து அணையின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. பேரணை முதல் கள்ளந்திரி வரை இரண்டு போக சாகுபடி நிலங்களுக்கு முதல் போக சாகுபடிக்கு வரும் ஜூலை 1ம் தேதி பாசனத்திற்கு தண்ணீர் திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். தற்போது ஜூன் மாதத்திலிருந்து ஜூலை என காலம் தாமதமாகி விட்டது. மேலும் காலதாமதமானால் அறுவடை காலத்தில் பருவ மழையினால் விவசாயம் பாதிக்கும். விரைந்து நடவடிக்கை எடுத்து ஜூலை முதல் தேதி தண்ணீர் திறக்க வேண்டும் என

தெரிவித்திருந்தனர்.

மனுவை பெற்றுக்கொண்ட கலெக்டர் பொதுப்பணி துறைக்கு பரிந்துரை செய்து நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.